Registered as a news paper.

பக்கங்கள்: பத்து

விலை: ரூபா 6.00

நமது ஈழநாடு

தமிழர் தாயகத்தின் முன்னோடி நாளிதழ்

ஆசியாவின் நம்பர் 1 சீமேந்து
SLS 107 அங்கீகாரம் பெற்றது.
ISO 9002 தரம் பெற்றது.
BSS 12 - 1991 தரத்திற்கு அமைவானது.
இவை அனைத்தையும் கொண்ட உயர்தர சீமேந்து.
ரா ம் கோ
MADRAS CEMENTS LTD
RAMCO CEMENT
சீமேந்து
ரா ம் கோ
(சி-1147)

மலர் : 01 திருவள்ளுவர் ஆண்டு: 2034 ஆடி 03 ஆம் நாள், ஹிஜ்ரி 1425 அவ்வல் 18 (19.07.2003) சனிக்கிழமை இதழ்: 290

# இடைக்கால நிர்வாக திட்ட வரைபு குறித்து வெளிநாடு ஒன்றில் சந்தித்து ஆராயப்படும்

## நீண்ட கலந்துரையாடல்கள் தேவைப்படும் எனத் தகவல்

(கொழும்பு)

வடக்கு - கிழக்குக்கான இடைக் கால நிர்வாக அலகிற்குரிய திட்ட வரைபு குறித்து, முதற்கட்டக் கலந் துரையாடல், வெளிநாடு ஒன்றிலேயே நடைபெறவுள்ளதாகத் தெரியவருகி றது.

முத்தரப்புக் கருத்துப் பரிமாற் றங்களுடன் நடைபெறவிருக்கும் இக்கலந்துரையாடலில்- அரச மற் றும் விடுதலைப் புலிகளின் பிரதி நிதிகளுடன், நோர்வே அரசின் விசேட பிரதிநிதி ஒருவரும் பங்குபற்றவுள் ளார்.

தற்போது விடுதலைப் புலிகளி டம் அரசினால் வழங்கப்பட்டிருக்கும், இடைக்கால நிர்வாகக் கட்டமைப்புத் தொடர்பான திட்டவரைபு தொடர் பாக, பலசுற்றுக் கலந்துரையாடல் கள் நடத்தப்படவேண்டியுள்ளது என் றும், இவ்வாறான நீண்ட தொடர்ச்சி யான கலந்துரையாடல்கள் அனைத் தும் வெளிநாடு ஒன்றிலேயே நடத் தப்படவுள்ளன என்றும், கொழும்பு இராஜதந்திர வட்டாரங்களிலிருந்து தெரியவருகிறது.

இவ்வாறான பலசுற்றுக் கருத் துப் பரிமாற்றங்களின் பின்னர், ஏற்க னவே அரசினால் சமர்ப்பிக்கப்பட்ட திட்ட வரைபில் திருத்தங்கள் செய் யப்பட்டு, முழுமையான திட்ட வரைபு ஒன்று தயாராகும் எனவும் தெரியவருகிறது.

இத்திட்டவரைபை முழுமையாக (10 ஆம் பக்கம் பார்க்க)

# கொழும்பிலிருந்து கிளம்பவிருந்த விமானத்தில் வெடிகுண்டுப் புரளி!

## பயணிகள் இறக்கப்பட்டு கடும் சோதனை

(கொழும்பு)

**கொழும்பு - கட்டுநாயக்க சர்வதேச விமான நிலையத்திலிருந்து புறப்படவி ருந்த 'கதே பசுபிக்' விமானம் ஒன்றில் வெடிகுண்டு இருப்பதாக எழுந்த புரளியைத் தொடர்ந்து, பெரும் பதற்றம் எழுந்தது. விமானத்திலிருந்த பயணி கள் இறக்கப்பட்டு கடும் சோதனை நடத்தப்பட்டது. எனினும், குண்டுகள் எதுவும் கண்டுபிடிக்கப்படாததால் அந்த விமானம் ஆறு மணித்தியாலங்கள் தாமதித்தே புறப்பட்டுச் சென்றது.**

கட்டுநாயக்க விமான நிலையத் திலிருந்து ஹொங்கொங்கிற்கு 'கதே பசுபிக்' விமானம், புறப்படுவதற்குச் சில நிமிடங்கள் இருந்தபோது, கிடைத்த அநாமதேய தொலைபேசி அழைப்பொன்றில்- அந்த விமானத் தில் குண்டு வைக்கப்பட்டிருப்பதா கத் தெரிவிக்கப்பட்டது.

இதைத் தொடர்ந்து, இந்த விமா னத்தின் புறப்பாடு உடனடியாக நிறுத் தப்பட்டதோடு -

விமானத்தில் இருந்த 360 பயணி களும், 12 விமானச் சிப்பந்திகளும் (10 ஆம் பக்கம் பார்க்க)

# வடமராட்சியில் நேற்று திடீரென வீதித்தடைகள்

வடமராட்சி- தம்பசிட்டி, முதலாம் கட்டைச்சந்தி, மந்திகை, ஆலடிச் சந்தை ஆகிய இடங்களில், படை யினரால் திடீரென வீதித் தடைகள் போடப்பட்டு, சோதனை நடவடிக் கைகள் மேற்கொள்ளப்பட்டன.

நேற்றுமாலை 4 மணியளவில், வீதியால் வந்த மோட்டார் சைக்கிள் கள், பயணிகள் பஸ் ஆகியவற்றை வழிமறித்துப் படையினர் சோதனை செய்தனர்.

மந்திகை - ஆலடிச்சந்தை வீதிக் குக் குறுக்கேயும் வீதித்தடைகள் போடப்பட்டு சோதனை நடத்தப்பட்டது.

முதலாம் கட்டைச் சந்தியில் வைத்து, அந்த வீதியூடாக வந்த வாகனங்கள் வழிமறிக்கப்பட்டுச் சோத னையிடப்பட்டன. (09)

## விண்ணாணம் விநாசியர்



குடுத்தாலும் குற்றமடா, குடுத் திட்டுச் சொல்லாமல் விட்டாலும் குற்றமடா...!

# திட்டங்களுக்கு முழு ஆதரவு புலிகளுக்கு உலக வங்கி நன்றி

(திருகோணமலை)

வட - கிழக்கில் உலக வங்கியின் உதவியுடன் மேற்கொள்ளப்பட்டு வருகின்ற திட்டங்களுக்கு, விடுதலைப் புலிகள் அளித்துவரும் ஆதரவுக்கு தாம் நன்றி தெரிவிப்பதாக - உலக வங்கியின் இலங்கைக்கான வதிவிடப் பிரதிநிதி பீற்றர் ஹரோல்ட் கூறியுள்ளார்.

திருமலையில் - உலக வங்கியின் 2003 - 2006 ஆம் வருடங்களுக்குரிய திட்டங்கள் பற்றிய அறிக்கையின் தமிழ் வடிவத்தை வெளியிட்டுப் பேசிய அவர் - இந்த அறிக்கையின் முதற்பிரதியை விடுதலைப்புலிகளின் திட்டமிடல் பணிப்பாளர் தூயவனுக்கு வழங்கினார்.

இந்த வைபவத்தில் உரையாற்றிய தூயவன் (10 ஆம் பக்கம் பார்க்க)



விடுதலைப்புலிகளின் திட்டமிடல் பணிப்பாளர் தூயவனுடன் உலக வங்கி யின் இலங்கைக்கான வதிவிடப் பிரதிநிதி பீற்றர் ஹரோல்ட்.

# ஜனாதிபதியிடம் யோசனை பெறாது திட்ட வரைபு சமர்ப்பித்தது தவறாம்!

## பொ.ஐ.மு.பேச்சாளர் சரத் அமுனுகம

ஜனாதிபதியின் கருத்துக்க ளைக் கேட்டறியாமல், வடக்கு - கிழக்கிற்கான இடைக்கால நிர்வா கம் தொடர்பான யோசனைகளை, அரசாங்கம் விடுதலைப் புலிகளிடம் கையளித்துள்ளமை, அரசியலமைப் புக்கு முரணானது என, பொதுஜன ஐக்கிய முன்னணியின் பேச்சாளர் சரத் அமுனுகம தெரிவித்தார்.

ஜனாதிபதியின் கவனத்திற்கு கொண்டு வரப்படாத விடயங்கள் அடங்கிய இந்த யோசனை தொடர் பாக, சட்டரீதியான சிக்கல்கள் ஏற் படலாம் என்றும் அவர் தெரிவித் தார்.

இதனால், தற்போது விடுதலைப் புலிகளிடம் கையளிக்கப்பட்டுள்ள யோசனைகளை நடைமுறைப்படுத் தும்போது - சிக்கல்கள் ஏற்படக் கூடிய வாய்ப்பு இருப்பதாகவும் அவர் தெரிவித்தார்.

இடைக்கால நிர்வாகம் தொடர் பான யோசனைகளை, அரசாங்கம் (10 ஆம் பக்கம் பார்க்க)

# முல்லைத்தீவு வெற்றிவிழா

(முல்லைத்தீவு)

வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த 'ஓயாத அலைகள்- 1' நடவடிக்கை மூலம் முல்லைத்தீவுப் படைமுகாம் விடுதலைப் புலிகளால் வெற்றி கொள்ளப்பட்டதன் ஏழாம் ஆண்டு வெற்றி நாள் நிகழ்வுகள், முல்லைத்தீவில் பிரமாண்டமாக இன்று நடைபெறவுள்ளன.

முல்லைத்தீவு நகரின் பொது மைதானத்தில் இன்று நடைபெற வுள்ள வெற்றிநாள் நிகழ்வுகளில், சிறப்பு ஊர்திகள் பவனியும், அணி வகுப்புக்களும், கலை நிகழ்வுக ளும், சிறப்புரைகளும் இடம்பெற வுள்ளன.

# பஸ்சேவை திடீரென ரத்தானது; புங்குடுதீவு ஊழியர் களேபரம்!

## நேற்றுக்காலை யாழ்.பஸ்நிலையத்தில் சம்பவம்

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணத்திலிருந்து புங்குடுதீவு - இறுப்பிட்டி அரச ஊழியர்களுக் கான பஸ்சேவை நேற்றுக்காலை திடீரென நிறுத்தப்பட்டதையடுத்து, யாழ். பஸ்நிலையத்தில், அந்த ஊழியர்கள் பெரும் களேபரத்தில் ஈடுபட்டனர். யாழ். பஸ்நிலையத்திலுள்ள டிப்போ அலுவலகத்தினுள் புகுந்து, அங்கு கடமையிலிருந்த பொறுப்பதிகாரியுடன் வாய்த்தர்க் கத்தில் அவர்கள் ஈடுபட்டனர்.

இதனைத்தொடர்ந்து- வேறுமார்க்கத்துக்கான பஸ் ஒன்று யாழ்.- இறுப்பிட்டி சேவைக்காக அங்கு கொண்டுவரப்பட்டது. எனினும், மாலையில் குறிப்பிட்ட சேவை மீண்டும் தடைப்பட்டது. (10 ஆம் பக்கம் பார்க்க)

Expo Aviation (Pvt) Ltd.
EXPO Aviation
எக்ஸ்போ
இலங்கையில் முன்னணி வகிக்கும் உள்ளூர் விமான சேவை....
ஒதுக்கீடுகளுக்கு அழையுங்கள் 021 ~ 2223891 071 349999
071 348888 074 ~ 512666 ~ 01 ~ 360290
(சி-1139)

# இலங்கை அரசு
# வடக்கு - கிழக்கு மாகாண சபை
# வடக்கு - கிழக்கு துரித மீளமைப்புத் திட்டம்
# கடன் இல. 2880 சி.இ.
## தேசி போட்டிக் கூறுவிலை கோரல்
## (நிர்மாண வேலைகள்)

# கேள்வி அறிவித்தல் ஐ.எவ்.பி.

ஐ.எவ்.பி இல: ஜேஎவ்/நீரப்/டிபிடிஏச்எஸ்/02 திகதி: 17/07/2003

1. வடக்கு - கிழக்கு துரித மீளமைப்புத் திட்டத்தின் ஆகுசெலவு சார்பாக சர்வதேச அபிவிருத்தி அமைப்பிலிருந்து கடனொன்றை இலங்கை அரசு பெற்றுள்ளது. கீழுள்ள அட்டவணையில் விவரிக்கப்பட்டுள்ள நிர்மாண வேலைகளுக்கான ஒப்பந்தங்களின் கீழ் தகுதிவாய்ந்த கொடுப்பனவுகளுக்கு இக்கடனின் ஒருபகுதியைப் பிரயோகிக்க உத்தேசிக்கப்பட்டுள்ளது. இதற்கு இலங்கையுட்பட சகல நிதியிடும் நாடுகளைச் சேர்ந்த தகுதிவாய்ந்த கேள்விதாரர்களிடம் இருந்து பின்வரும் வரையறுக்கப்பட்ட வழிகாட்டலின் கீழ் கேள்விகள் கோரப்படுகின்றன.
   ஐ.பி.ஆர்.டி (IBRD) கடன் வசதி, ஐ.டி.ஏ (IDA) நம்பிக்கையின் கீழான வசதி.
2. மாவட்டச் செயலாளர், யாழ்ப்பாணம், இலங்கை அவர்களினால் மூடிய கேள்விகள் தகுதியான ஒப்பந்ததாரர்களிடம் இருந்து பின்வரும் கட்டடத் தொகுதிகள் நிர்மாணிப்பதற்குக் கோரப்படுகின்றன.
3. மீளளிக்கப்படாத கட்டணமாக ஒவ்வொரு வேலைக்கும் ரூபா 1000/- ஐ காசாகவோ அல்லது யாழ்ப்பாணத்தில் மாற்றத்தக்கதான யாழ்ப்பாண மாவட்டச் செயலாளரின் பெயரில் அங்கீகரிக்கப்பட்ட வங்கியில் பெறப்பட்ட வங்கி ஆணையாகவோ (Draft) சமர்ப்பிப்பதன் பேரில் பிரதம எந்திரி, கட்டடங்கள் திணைக்களம், யாழ்ப்பாணம் அவர்களிடம் இருந்து 20/08/2003 ஆம் திகதி பிற்பகல் 15.00 மணிவரை கேள்விப்பொதிக்கான கேள்வி ஆவணங்களின் இரு பிரதிகளைப் பெற்றுக்கொள்ளலாம்.
4. ஆர்வமுள்ள தகுதியான கேள்விதாரர்கள் கேள்விப் பத்திரங்களை பிரதம எந்திரி (கட்டடங்கள்), யாழ்ப்பாணத்தில் இலவசமாகப் பார்வையிடுவதோடு, மேலதிக விபரங்களையும் பின்வரும் முகவரியில் பெற்றுக்கொள்ளலாம்.

   பிரதம எந்திரி,
   கட்டடங்கள் திணைக்களம் (மாகாணம்),
   கடற்கரை வீதி,
   யாழ்ப்பாணம்.
   தொலைபேசி/தொலைநகல் இல: 021 - 2222632

5. சமர்ப்பிக்கப்படும் கேள்வி, கேள்விகள் திறக்கப்படும் தினத்திலிருந்து 90 நாட்களுக்குச் செல்லுபடியானதாக இருத்தல் வேண்டும். அத்துடன் யாழ்ப்பாண மாவட்டச் செயலாளரின் பெயரில் எடுக்கப்பட்ட கேள்விப் பிணையும் கேள்விகளுடன் இணைக்கப்பட்டு, அரசாங்க அதிபர், மாவட்டச்செயலகம், கச்சேரி என்ற முகவரிக்கு 21/08/2003 ஆம் திகதி பிற்பகல் 15.00 மணிக்கு முன்னர் கையளிக்கப்படல் வேண்டும். அதே தினம் கேள்விகள் திறக்கப்படும். கேள்விதாரர் அல்லது அவரின் பிரதிநிதி விரும்பின் சமுகமளிக்கலாம். மேற்குறிப்பிட்ட திகதியில் காரியாலயம் மூடப்படவேண்டிய சந்தர்ப்பம் ஏற்படின் அதற்கு அடுத்த வேலை நாளன்று அதே இடத்தில் அதே நேரத்தில் கோரல்கள் பெறப்பட்டுத் திறக்கப்படும்.
6. வேறு விபரங்கள் தேவைப்படின் கேள்வி ஆவணங்களில் பார்வையிடலாம்.

## விபர அட்டவணை

| கேள்விக்குறியீடு | வேலை விபரம் | கேள்விப்பிணை ரூபா | கே.ஆவணங்களின் பெறுமதி ரூபா | வேலை முடிக்கப்பட வேண்டிய காலம் |
|---|---|---|---|---|
| 1ஜேஎவ்/நீரப்/டிபிடிஏச்எஸ்/02. | சு.வை.அதிகாரி அலுவலகம் மீளநிர்மாணித்தல், சங்கானை (மானிப்பாய்) | 106,000/- | 1000/- | 09 மாதம் |
| 2ஜேஎவ்/நீரப்/டிபிடிஏச்எஸ்/03 | சு.வை.அதிகாரி அலுவலகம் மீளநிர்மாணித்தல், சாவகச்சேரி. | 104,000/- | 1000/- | 09 மாதம் |
| 3.ஜேஎவ்/நீரப்/டிபிடிஏச்எஸ்/04 | சு.வை.அதிகாரி அலுவலகம் மீளநிர்மாணித்தல், பருத்தித்துறை. | 99,000/- | 1000/- | 09 மாதம் |
| 4.ஜேஎவ்/நீரப்/டிபிடிஏச்எஸ்/05 | ஆரம்ப சுகாதார பராமரிப்பு நிலையம் படி-11 மீளநிர்மாணித்தல், சுன்னாகம். | 75,000/- | 1000/- | 07 மாதம் |
| 5.ஜேஎவ்/நீரப்/டிபிடிஏச்எஸ்/06 | ஆரம்ப சுகாதார பராமரிப்பு நிலையம் படி-11 மீளநிர்மாணித்தல், புத்தூர். | 75,000/- | 1000/- | 07 மாதம் |
| 6.ஜேஎவ்/நீரப்/டிபிடிஏச்எஸ்/07 | வைத்திய அதிகாரியின் விடுதி மீளநிர்மாணித்தல், ஆதார வைத்தியசாலை, பருத்தித்துறை. | 65,000/- | 1000/- | 07 மாதம் |
| 7.ஜேஎவ்/நீரப்/டிபிடிஏச்எஸ்/08 | ஆரம்ப சுகாதார பராமரிப்பு நிலையம் மீளநிர்மாணித்தல், மட்டுவில். | 45,000/- | 1000/- | 06 மாதம் |
| 8.ஜேஎவ்/நீரப்/டிபிடிஏச்எஸ்/09 | ஆரம்ப சுகாதார பராமரிப்பு நிலையம் மீளநிர்மாணித்தல், கச்சாய். | 45,000/- | 1000/- | 06 மாதம் |

7. கேள்விதாரர்கள், கேள்விதாரருக்கான செயற்பிரமாணக் குறிப்புக்கள் 04 ஆம் பந்தியில் சொல்லப்பட்ட நடைமுறைகளை ஆகக்குறைந்த தகைமைகளாகக் கொண்டிருத்தல் வேண்டுமென இத்தால் ஆலோசனை வழங்கப்படுகின்றது.

செ.பத்மநாதன்.
அரசாங்க அதிபர்,
மாவட்டச் செயலாளர்,
மாவட்டச் செயலகம், யாழ்ப்பாணம்.

(சி-1248)

## நாடும் நடப்பும்

சங்கரியின் சரணாகதி




# பெண்போராளிகளின் மோட்டார் சைக்கிள் அடாவடித்தனமாக பறித்தெடுத்த படையினர்!

## மட்டக்களப்பில் நேற்றுமுன்தினம் மாலை சம்பவம்

மட்டக்களப்பில் அரசியல் நடவடிக்கையில் ஈடுபட்டிருந்த விடுதலைப் புலிகளின் பெண் போராளிகளிடம் மோட்டார் சைக்கிளைப் படையினர் கைப்பற்றியதுடன், அவர்களைத் தொடர்ந்து பயணஞ்செய்யவும் அனுமதி மறுத்தனர்.

போராளிகளிடம் மோட்டார் சைக்கிள் அனுமதிப் பத்திரத்தைக் கேட்ட படையினர், இந்த அடாவடித்தனத்தில் ஈடுபட்டதாகத் தெரியவருகின்றது.

நேற்றுமுன்தினம் மாலை 6.30 மணியளவில், மட்டக்களப்பிலிருந்து கொக்கட்டிச்சோலை நோக்கி மோட்டார் சைக்கிளில் சென்றுகொண்டிருந்த இரு பெண் போராளிகளை, கல்லடி மணிக்கூட்டுக்கோபுரத்தடியில் காவல் கடமையிலிருந்த படையினர் வழிமறித்தனர்.

இவர்களிடம் - மோட்டார் சைக்கிள் அனுமதிப்பத்திரத்தைக் காண்பிக்குமாறு படையினர் கேட்டனர். அவர்களிடம் வாகன அனுமதிப் பத்திரம் இல்லாததையடுத்து, மோட்டார் சைக்கிளைப் படையினர் பறித்தெடுத்தனர்.

இந்தச் சம்பவம் நடைபெற்றுக் கொண்டிருந்தவேளை, அப்பகுதியில் பெருமளவிலான மக்கள் கூடி, படையினரின் நடவடிக்கைக்கு எதிர்ப்புத் தெரிவித்தனர்.

மேற்படி சம்பவம் தொடர்பாகப் புலிகளின் மட்டக்களப்பு நகர அலுவலகப் பொறுப்பாளர் வீரபாண்டியன்- பொலிஸாருக்கும், யுத்த நிறுத்தக் கண்காணிப்புக் குழுவுக்கும் தெரியப்படுத்தினார். சம்பவ இடத்திற்குச் சென்ற கல்லடிப் பொலிஸார், படையினர் வசமிருந்த மோட்டார் சைக்கிளை மீளப்பெற்று, போராளிகளிடம் ஒப்படைத்தனர்.

# கனடாவில் சி.எம்.ஆர். நிறுவனத்துக்கு தமிழ் பண்பலை ஒலிபரப்புக்கு அனுமதி!

கனேடிய பல்கலாசார வானொலியின் பண்பலை வரிசையை - கனடாவிலுள்ள தமிழ் நிறுவனத்திற்கு வழங்க எடுத்த முடிவை, கனேடிய அரசு மீண்டும் உறுதிசெய்து, பீ.சி. 2003-1049 என்ற இலக்கத்தின்கீழ் அதை ஏற்றுக்கொண்டுள்ளது.

இவ்வருடம் ஏப்ரல் மாதம் 17 ஆம் திகதி, கனேடிய வானொலி-தொலைககாட்சி மற்றும் தொலைத்தொடர்புகளுக்கான அரச நிறுவனம் (சி.ஆர்.ரி.சி.) வழங்கிய தீர்ப்பின்படி, கனேடிய பல்கலாசார வானொலிக்கு (சி.எம்.ஆர்.), கனடாவின் ரொரான்ரோ பெரும்பாகத்திற்கான புதிய பண்பலை வரிசை (எப்.எம்.) வழங்கப்பட்டது. 16 மொழிகளைப்பேசும் 22 ஆசிய இனத்தவர்கள் - இந்தப் பண்பலை வரிசையூடாக சேவைகளைப் பெறுவார்கள். தமிழ், ஹிந்தி, பிலிப்பினோ, பார்சி, வியட்னாமிஸ், உருது, சோமாலி, பஞ்சாபி, ஸ்பானிய மற்றும் அரபி மொழிகள் இதற்குள் அடங்குகின்றன.

இதில் 45 வீதமான ஒலிபரப்பு - தமிழ், ஹிந்தி, பஞ்சாபி, உருது ஆகிய ஆசிய மொழிகளுக்கே ஒதுக்கக்கப்பட்டுள்ளது. இப்பண்பலை வரிசைக்காக இரண்டு தமிழ் நிறுவனங்கள் உட்பட, பல்லின ஒலிபரப்புத்துறையினரும் விண்ணப்பித்திருந்தார்கள். இவ்வருடம் ஏப்ரல் மாதத்தில் வழங்கப்பட்ட தீர்ப்பிலேயே, இப்பண்பலைவரிசையை சி.எம்.ஆர். வானொலி நிலையத்திற்கு வழங்குவதாக அறிவிக்கப்பட்டது.

இந்த அறிவிப்பைத் தொடர்ந்து, இதற்காக விண்ணப்பித்து, தமக்குச் சார்பாக முடிவு கிடைக்காததனால் ஏமாற்றமடைந்த மற்றைய தமிழ் நிறுவன விண்ணப்பதாரர், மிகக் கடுமையான எதிர்ப்பு நடவடிக்கைகளிலும், இம்முடிவுக்கெதிரான மேல்முறையீட்டு விண்ணப்பத்தைச் சமர்ப்பிப்பதிலும் ஈடுபட்டார். சி.எம்.ஆர்.நிறுவனம் -பயங்கரவாத அமைப்பாகக் கனேடிய மண்ணில் தடைசெய்யப்பட்டுள்ள விடுதலைப் புலிகள் அமைப்போடு தொடர்புடையது என்றும், மேலும் பல குற்றச்சாட்டுக்களையும் இணைத்து, இம்மேல்முறையீட்டிற்குச் சார்பாகப் பலரின் கையெழுத்தையும் பெற்று, இம்முறையீட்டை சம்பந்தப்பட்ட எதிர்ப்பாளர் சமர்ப்பித்திருந்தார்.

இதை ஆய்வு செய்த சி.ஆர்.ரி.சி. நிறுவனம் - தனது முடிவை அறிவிக்குமுன்னர், இம்முறையீடு குறித்து, கனேடிய அமைச்சரவையிலும் விவாதிக்கப்பட்டது. கனேடிய எதிர்க்கட்சியினர்கூட, இதுகுறித்து விசனம் தெரிவித்திருந்தனர். இறுதியில், கடந்த புதன் கிழமை கனேடிய கவுன்சில் கவர்னர், கனேடிய அரசின் சார்பில், சி.எம்.ஆர்.நிறுவனத்திற்குச் சார்பாக தமது முடிவை அறிவித்தார்.

கொடுக்கப்பட்ட மேல்முறையீட்டின்படி, இந்த நிறுவனத்தின்மேல் சுமத்தப்பட்டுள்ள குற்றச்சாட்டுக்கள் ஆதாரமற்றவை என்றும், சி.ஆர்.ரி.சி. நிறுவனத்தின் கொள்கைகளுக்கு மாறாக எதுவித செயற்பாட்டிலும் இவர்கள் இறங்கவில்லை என்றும் தெரிவித்துள்ள கவுன்சில் கவர்னர், இந்த மேல்முறையீட்டை ரத்துச்செய்து, சி.எம்.ஆர்.நிறுவனத்திற்கே தொடர்ந்தும் இந்த பண்பலையை வழங்கியுள்ளார். இத்தகவலை ஊடகத்தொடர்புகளுக்குப் பொறுப்பாகவுள்ள ஆன்-ஷோபி லோலெஸ், ஒட்டாவா நகரில் எழுத்துமூலமும் இதனை அறிவித்துள்ளார்.

# திஸ்ஸமஹாரகம விடுதியில் 104 வெளிநாட்டவர் கைது

## சட்டவிரோத பயணத்திற்காகக் காத்திருந்தவர்களாம்

(கொழும்பு)

திஸ்ஸமஹரகமவிலுள்ள ஹோட்டல் ஒன்றில் தங்கியிருந்த 104 வெளிநாட்டவர்கள், நேற்றுமுன் தினம் பொலிஸாரால் கைதுசெய்யப்பட்டனர்.

இவர்கள், இலங்கையூடாகச் சட்டவிரோதமாக வெளிநாடுகளுக்குச் செல்வதற்காகவே, இங்கு வந்து தங்கியிருந்ததாக விசாரணைகளின் போது தெரியவந்தது. 98 இந்தியர்களும், 6 பாகிஸ்தானியர்களும் இவர்களில் அடங்குகின்றனர்.

இவர்கள் மீதான விசாரணைகள் நேற்றுமுன்தினம் ஆரம்பமாகியபோதும் - இவர்கள் ஹிந்தி மொழியை மட்டும் பேசுபவர்களாக இருந்ததால், விசாரணைகளில் காலதாமதங்கள் ஏற்படுமெனப் பொலிஸார் தெரிவிக்கின்றனர். இதற்கு முன்னரும் சட்டவிரோதமாகக் கடல்வழியாக மேற்கு நாடுகளுக்குச் செல்வதற்காகக் காத்திருந்தபோது, காலியில் வைத்துப் பொலிஸார் பல வெளிநாட்டவர்களைக் கைதுசெய்து, விசாரணைகளை நடததி வருவது தெரிந்ததே.

அண்மையில் தங்காலை கடற்பரப்பில் தரித்துநின்ற வெளிநாட்டுக் கப்பலொன்றில் வைத்துக் கைது செய்யப்பட்ட 200 வெளிநாட்டவர்கள் மீதும், விசாரணைகள் நடைபெற்று வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

## மாரப்பன, தயாசந்தகிரி இஸ்ரேலிலிருந்து திரும்புகின்றனர்!

(கொழும்பு)

கடந்த இரண்டு வாரங்களுக்கு முன்னர், இஸ்ரேலுக்குச் சென்றிருந்த பாதுகாப்பு அமைச்சர் திலக் மாரப்பனவும், கடற்படைத் தளபதி தயாசந்தகிரியும் இன்று நாடு திரும்பவுள்ளனர்.

இலங்கைக் கடற்படையை நவீனமயப்படுத்துவதற்காகவும், நவீன ரக ஆயுதங்களைக் கொள்வனவு செய்வதற்காகவுமே இவர்கள் இஸ்ரேலுக்குச் சென்றிருந்ததாகச் செய்திகள் வெளியாகியிருந்தன.

# மட்டக்களப்பு வரும் வாகனங்களை களுவன்கேணியில் படையினர் பதிவு!

கொழும்பிலிருந்து மட்டக்களப்புக்கு வியாபார நோக்கத்திற்காக வருகின்ற லொறிகள் யாவும், வந்தாறுமூலை படைமுகாமில் பதிவு செய்யப்படுகின்றன. தேங்காய், கிடுகு, சீமெந்து போன்ற பல வியாபாரப் பொருட்களை ஏற்றிவரும் வாகனங்களே, படையினரால் பதிவு செய்யப்படுகின்றன.

வந்தாறுமூலை களுவன்கேணிச் சந்தியில் இந்த வாகனங்கள் படையினரால் தடுத்துநிறுத்தப்பட்டு, பதிவுகள் மேற்கொள்ளப்படுகின்றன.

இதனால் - குருநாகல், திருகோணமலை, கொழும்பு போன்ற பகுதிகளிலிருந்து வருகின்ற மூவின வர்த்தகர்களும் பாதிக்கப்படுவது குறிப்பிடத்தக்கது.

# தமிழர் பிரச்சினை சர்வதேசமறிய மாவீரர்களின் தியாகமே காரணம்!

## மட்டு - அம்பாறை அரசியற்பொறுப்பாளர் கௌசல்யன்

தமிழர்களுக்குரிய பிரச்சினை சர்வதேச ரீதியாக அறியப்படவும், இனப்பிரச்சினைத் தீர்வுக்குப் பேச்சுவார்த்தைகளை முன்னெடுக்க சர்வதேச சமூகம் அரசுககு அழுத்தம் கொடுக்கவும், காரணமாக அமைந்தது மாவீரர்களுடைய தியாகமே.

- இவ்வாறு, விடுதலைப் புலிகளின் மட்டக்களப்பு- அம்பாறை மாவட்ட அரசியற்துறைப் பொறுப்பாளர் கௌசல்யன் தெரிவித்தார்.

லெப்ரினன்ட் கேணல் றீகனின் நினைவாக, அவரது சொந்த ஊரான வெல்லாவெளியில் இடம்பெற்ற நினைவு நாள் நிகழ்வில் உரையாற்றும்போது, அவர் இவ்வாறு தெரிவித்தார்.

மட்டக்களப்பு - அம்பாறை பிராந்தியத்தில் விடுதலைப் புலிகள் வளர்ச்சியடைவதற்கு, மாவீரரான லெப்ரினன்ட் றீகனின் பங்களிப்பு, உந்துசக்தியை அளித்தது என்றும் அவர் மேலும் தெரிவித்தார்.



லெப்.கேணல் றீகன் நினைவுநாள் நிகழ்வில், மாவடி முன்மாரிக் கோட்டத் தளபதி ராம் தேசியக் கொடியினை ஏற்றுவதையும், லெப்.கேணல் றீகனின் நினைவுத்தூபியையும் படங்களில் காணலாம்.

# பாடுமீன் கலைக் கல்லூரி மட்டக்களப்பில் திறப்பு !

மட்டக்களப்பு, பன்குடாவெளியில் கடந்த புதன்கிழமை - பாடுமீன் கலைக் கல்லூரி மூத்த தளபதி கேணல் கருணா அம்மானால் திறந்துவைக்கப்பட்டது.

மட்டு கலை பண்பாட்டுப் பொறுப்பாளர் எஸ்.பி.ஈஸ்வரநாதன் தலைமையில் நடைபெற்ற இந்த நிகழ்வில், மட்டு- அம்பாறை சிறப்புத் தளபதி ரமேஸ் ஈகச்சுடரினை ஏற்றிவைத்தார். தேசியக்கொடியை கேணல் கருணா அம்மான் ஏற்றிவைத்து, கல்லூரியைத் திறந்துவைத்தார்.

இந்த நிகழ்வில் மட்டு - அம்பாறை மகளிர் சிறப்புத்தளபதி நிலாவினி, மட்டு - அம்பாறை இராணுவத் தளபதி ராபர்ட் ஆகியோரும் கலந்துகொண்டனர்.

இந்நிகழ்வில் - இசைக்கலைஞர்கள் ஐந்து பேர், கேணல் கருணா அம்மானால் கௌரவிக்கப்பட்டனர்.

மட்டக்களப்பு மாவட்டத்தைச் சேர்ந்த எஸ்.ஞானப்பிரகாசம், கலைராணி, தபேலா இசைக்கலைஞர் கே.ஜெறி, சி.தமிழரசி, ஜீவிதா ஆகியோர் கௌரவிக்கப்பட்டதுடன், அம்பாறை மாவட்டம் திருக்கோயில் இராமகிருஷ்ணா இசைக்குழுவினருக்கும் பாராட்டுத் தெரிவிக்கப்பட்டது.

# யாழ். புனர்வாழ்வுக் கூட்டத்தில் பிரதமரின் அலுவலக அதிகாரி!

யாழ்.மாவட்ட புனர்வாழ்வு ஒருங்கிணைப்புக்குழுக் கூட்டம், எதிர்வரும் 27 ஆம் திகதி காலை 10 மணியளவில், யாழ்.அரசாங்க அதிபர் பணிமனையில் இடம்பெறவுள்ளது.

இக்கூட்டத்தில், பிரதமரின் அலுவலகத்தைச் சேர்ந்த உயரதிகாரியான சிவநாதனும் கலந்துகொள்ளவுள்ளார்.

யாழ். அரசாங்க அதிபர் செ.பத்மநாதன் தலைமையில் நடைபெறவுள்ள இக்கூட்டத்தில்- கடந்த காலங்களில் மேற்கொள்ளப்பட்ட புனர்வாழ்வு நடவடிக்கைகள் தொடர்பாக ஆராயப்படவுள்ளதுடன், எதிர்காலத்தில் மேற்கொள்ளப்படவுள்ள திட்டங்கள் பற்றியும் கலந்துரையாடப்படவிருக்கிறது.

### நெடுந்தீவு பிரதேசசபையில் முகாமிட்டிருந்தபோது

# கடற்படை, ஈ.பி.டி.பி. பாவித்த தொலைபேசி;

# நிலுவை செலுத்தப்படாததால் சேவை துண்டிப்பு!

நெடுந்தீவில் கடற்படையினரும், ஈ.பி.டி.யினரும் புதிதாக முகாம் அமைக்கும் முயற்சியில் ஈடுபட்டிருந்தபோது - நெடுந்தீவு பிரதேச சபைகு வழங்கப்பட்டிருந்த தொலைபேசியைப் பயன்படுத்தித் தொடர்புகளை மேற்கொண்டதற்கு, ஒரு இலட்சத்து மூவாயிரம் ரூபா கட்டணம் செலுத்தப்படாத நிலையில், பிரதேசபைக்குரிய தொலைத்தொடர்பு துண்டிக்கப்பட்டுவிட்டது.

இது தொடர்பாக - நெடுந்தீவு பிரதேசசபையால் - பாதுகாப்பு அமைச்சின் செயலாளருக்கு புகார்க் கடிதமொன்று அனுப்பிவைக்கப்பட்டுள்ளது. இக்கடிதத்தில் தெரிவிக்கப்பட்டிருப்பதாவது-

நெடுந்தீவுக்கு 2002 ஆம் ஆண்டு நவம்பர் 10 ஆம் திகதி திடீரென வந்த ஈ.பி.டி.பியினர், கடற்படை மற்றும் பொலிஸாரும் நெடுந்தீவு பிரதேசசபையில் முகாமிட்டனர். இதனால் அலுவலக ஊழியர்கள் அங்கிருந்து வெளியேறிவிட்டனர்.

கடற்படை முகாம், பிரதேசசபை அலுவலகத்தினுள் இருந்த காலப் பகுதியில், அங்கு பொருத்தப்பட்டிருந்த 070-212477 இலக்கத் தொலைபேசி பாவிக்கப்பட்டு, 2002 நவம்பர் முதல் மார்ச் வரையான காலத்திற்குரிய தொலைபேசிக் கட்டணமாக, ஒரு இலட்சத்து மூவாயிரம் ரூபா செலுத்த வேண்டியேற்பட்டது. இப்பணம் செலுத்தப்படாமையால் தொலைபேசி இணைப்புத் துண்டிக்கப்பட்டுவிட்டது.

நெடுந்தீவு பிரதேசசபைக்குரிய வருமானம் மிகக் குறைந்தளவிலேயே இருப்பதால், இந்த நிலுவையைச் செலுத்தமுடியாத நிலையில் பிரதேசசபை இருக்கின்றது.

எனவே - மேற்படி பிரதேசசபையில், கடற்படை முகாம் அமைந்திருந்த காலப்பகுதிக்குரிய தொலைபேசிக் கட்டணத்தைப் பாதுகாப்பு அமைச்சே வழங்கி, தொலைபேசியை மீண்டும் பயன்படுத்தக்கூடியதாக, ஆவனசெய்யவேண்டும் எனக் கேட்கப்பட்டுள்ளது.

இந்தக் கடிதத்தின் பிரதிகள்- ரெலிகொம் முகாமையாளர், இந்து கலாசார அமைச்சர் தி.மகேஸ்வரன் மற்றும் மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர்கள் ஆகியோருக்கும் அனுப்பிவைக்கப்பட்டுள்ளன. (113)

# செஞ்சிலுவைச் சங்கத்துடன் தொடர்புகொள்ள கோரிக்கை!

(யாழ்ப்பாணம்)

சர்வதேச செஞ்சிலுவைக் குழுவினர் - கீழ் குறிப்பிடப்பட்டுள்ளவர்களைத் தம்முடன் தொடர்புகொள்ளுமாறு அறிவித்துள்ளனர்.

லிகோரி அந்தோனியாப்பிள்ளை (17/10, கடற்கரை வீதி, குருநகர், யாழ்ப்பாணம்), கதிரன் மேரி (உச்சியோடை, மானிப்பாய் வடக்கு, யாழ்ப்பாணம்), சின்னகுமார் ஹெலன (132, புதிய கடற்கரை வீதி, குருநகர், யாழ்ப்பாணம்), பாவிலு சாள்ஸ் (52, கடற்கரை வீதி, குருநகர், யாழ்பபாணம்), திருமதி ஆசீர்வாதம் நிர்மலாதேவி (ஹென்ஸ்மன் ஒழுங்கை, உடுவில்), பாவிலுப்பிள்ளை தேவதாஸ் (H-9, ஐந்துமாடி வீட்டுத்திட்டம் குருநகர், (யாழ்ப்பாணம) ஆகியோரையே தொடர்புகொள்ளுமாறு கேட்கப்பட்டுள்ளது.

# யாழில் மீள்குடியேறும் முஸ்லிம்கள்; மாவட்டரீதியில் தகவல் திரட்டல்!

## மக்கள் பணிமனை ஈடுபடுகின்றது

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணத்திலிருந்து இடம் பெயர்ந்து - வெளிமாவட்டங்களில் வாழும் முஸ்லிம் மக்களில், 60 வீதமான மக்கள், சொந்த இடம் திரும்ப விருப்பம் தெரிவித்துள்ளனர்.

அவ்வாறானவர்களை மீளக்குடியேற்றுவதற்குரிய ஏற்பாடுகளை - "மக்கள் பணிமனை" செய்துவருகின்றது. புத்தளம், கம்பஹா, களுத்துறை, அநுராதபுரம் மற்றும் வேறு இடங்களிலும் தங்கியிருக்கும் இடம் பெயர்ந்த முஸ்லிம் மக்களின் விருப்பத்திற்கிணங்கவே, அவர்கள் இங்கு மீள வரவழைக்கப்படவுள்ளனர். இதற்காக, அவர்களின் குடும்ப விபரங்கள் என்பன திரட்டப்பட்டு வருகின்றன.

இங்குவந்த முஸ்லிம் மக்களை, மீள் குடியமர்த்துவதற்கான ஏற்பாடுகள் நடைபெற்று வருவதாகவும், அதற்கான பணிகள் முடிவுற்றவுடன், புதியவர்கள் இங்கு வரவழைக்கப்படவுள்ளனர் எனவும் தெரியவருகிறது.



ஆனைக்கோட்டை றோ.க.த.க.பாடசாலையில், ஜி.ரி.இசற் நிறுவனத்தினால் நிர்மாணிக்கப்பட்ட புதிய மாடிக்கட்டடத் திறப்புவிழா அண்மையில் நடைபெற்றபோது, வலிகாமம் பிரதிக் கல்விப்பணிப்பாளர் திருமதி நாகராசா கட்டடத்தைத் திறந்துவைப்பதையும், அருகே - பாடசாலை அதிபர் மற்றும் ஏனைய பிரமுகர்களையும் படத்தில் காணலாம். (46)

### மேஜர் முரளி ஞாபகார்த்த கிண்ணம்

# உதைபந்தாட்டப் போட்டிகளில் சுவிஸ், திருமலை அணி வெற்றி

(கிளிநொச்சி)

மேஜர் முரளி ஞாபகார்த்த உதைபந்தாட்டப் போட்டியில், 15 வயதுப் பிரிவில் - சுவிஸ் அணியும், 17 வயதுப் பிரிவில் - திருமலை அணியும் வெற்றிபெற்றன.

மேஜர் முரளி ஞாபகார்த்தமாக- கிளிநொச்சி பொது விளையாட்டு மைதானத்தில் நடைபெற்றுவரும் உதைபந்தாட்டப் போட்டித் தொடரின் 5 ஆம் நாள் போட்டித் தொடர், கடநத திங்களன்று இடம்பெறறது.

15 வயதுப் பிரிவில் - யாழ். உதைபந்தாட்ட அணிக்கும், சுவிஸ் உதைபந்தாட்ட அணிக்கும் இடையில் நடைபெற்ற போட்டியில், சுவிஸ அணி 8:0 என்ற கோல் கணக்கில் யாழ். அணியை வென்றது.

ச.நிஷாந் - 4 கோல்களையும், தர்சன் - 2 கோல்களையும், நவஜீவன், பிரவீன் ஆகியோர் தலா ஒரு கோலையும் போட்டனர்.

15 வயதுப் பிரிவில் - திருமலை உதைபந்தாட்ட அணிக்கும், சுவிஸ் உதைபந்தாட்ட அணிக்கும் இடையில் நடைபெற்ற போட்டியில் - திருமலை அணி, சுவிஸ் அணியை 3:2 என்ற கோல்கணக்கில் வென்றது. ஆட்டமுடிவில் இரு அணிகளும் தலா இரு கோல்களைப் போட்டிருந்தன.

சுவிஸ் அணியின் சார்பில் திவாகரன், சுதர்சன் ஆகியோரும், திருமலை அணியின் சார்பில் பிரபா, ரஜீவ், சிவச்சந்திரன் ஆகியோரும் கோல் போட்டனர். தொடர்ந்து வழங்கப்பட்ட இரண்டாவது மேலதிக நேரத்தில் திருமலை வீரர் கே.டி.ஜே. மதுசங்கர், தங்க கோல் போட்டு, தமது அணியை வெற்றிபெற வைத்தார்.

# காரைநகரில் புதிய பிரதேசசபை மக்கள் கருத்துத் தெரிவிக்கலாம்!

(யாழ்ப்பாணம்)

காரைநகர் பிரதேசத்தில் புதிதாக பிரதேசசபை ஒன்றினை அமைப்பது தொடர்பாக ஆராய்ந்து அறிக்கை சமர்ப்பிப்பதற்காக - உள்நாட்டலுவல்கள், மாகாணசபை, உள்ளூராட்சி அமைச்சினால் மூன்று அங்கத்தவர்கள் கொண்ட குழுவொன்று நியமிக்கப்பட்டுள்ளது.

எனவே, காரைநகரில் பிரதேசசபை அமைப்பது தொடர்பாக - பொதுமக்கள், நிறுவனங்கள் தங்கள் கருத்துக்களை முன்வைக்க விரும்பின், எதிர்வரும் 30 ஆம் திகதி காலை 10 மணிக்கு, யாழ்.செயலகத்தில் நடைபெறவுள்ள விசாரணையின்போது, கலந்துகொண்டு கருத்துக்களைத் தெரிவிக்கலாம் என யாழ். அரச அதிபர் செ.பத்மநாதன் அறிவித்துள்ளார்.

# யாழ்ப்பாணம் ஒஸ்மானியா கல்லூரி 3 ஆம் தவணை முதல் இயங்கும்!

(யாழ்ப்பாணம்)

நீண்டகாலமாக இயங்காத நிலையிலுள்ள யாழ்.ஒஸ்மானியா கல்லூரியை மீளச் செயற்படவைக்க நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகின்றது.

யாழ்ப்பாணத்தில் மீளக்குடியேறியுள்ள முஸ்லிம் மாணவர்கள் அவர்களுக்கென தனியான பாடசாலை இல்லாமல், வேறு பாடசாலைகளிலேயே கல்விகற்று வருகின்றனர். இதனால் - இஸ்லாமிய சமய பாடத்தினைக் கற்பதற்கு அவர்களுக்கென வசதிகள் கொண்ட தனியான பாடசாலையை ஏற்படுத்தும் வகையில் - ஒஸ்மானியா கல்லூரியை மூன்றாம் தவணை தொடக்கம் திறக்க ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

இதேவேளை - ஒஸ்மானியா கல்லூரிக்குச் செல்வதற்கான வீதி, நீண்டகாலமாகப் பழுதடைந்திருப்பதால், அவ்வீதியைப் புனரமைப்பதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படவிருப்பதாகவும் தெரியவருகிறது. (ரா)

## 'வேள்வி நெருப்பு' நூல் வெளியீடு!

(இணுவில்)

இணுவில் கலை இலக்கிய வட்டம் நடாத்தும் ச.வே.பஞ்சாட்சரத்தின் 'வேள்வி நெருப்பு' சிறுகதைத் தொகுதி நூல் வெளியீட்டுவிழா, நாளை ஞாயிற்றுக்கிழமை பி.ப. 3.30 மணிக்கு, இணுவில் மத்திய கல்லூரியில் நடைபெறவுள்ளது.

இணுவில் மத்திய கல்லூரி அதிபர் துரைஎங்கரசு தலைமையில் நடைபெறவுள்ள இந்த விழாவில், நூலின் வெளியீட்டுரையைப் பேராசிரியர் அ.சண்முகதாஸ் நிகழ்த்துவார். தொடர்ந்து - ஆய்வுரைகளை சிறுகதை எழுத்தாளர் ந.சத்தியபாலனும், கவிஞர் சோ.பத்மநாதனும் நிகழ்த்துவர்.

# பளை வைத்தியசாலைக்கு நிரந்தர வைத்தியர் நியமனம்

(பளை)

பளை வைத்தியசாலைக்குப் புதிதாக ஒரு நிரந்தர வைத்தியர் நியமிக்கப்பட்டுள்ளார். இதுவரை காலமும் நிரந்தர வைத்தியர் இன்மையால், பகுதிநேர வைத்திய சாலையாக இயங்கிவந்த இவ் வைத்தியசாலைக்கு, தற்போது மருத்துவ கலாநிதி கலாரதி நடராசன் புதிதாக நியமனம் செய்யப்பட்டுள்ளார்.

நிரந்தர வைத்தியர் நியமிக்கப்பட்டதையடுத்து, பளை வைத்தியசாலை தொடர்ந்து வாரநாட்களில் முழுநேரமாகவும், சனிக்கிழமைகளில் அரைநாளும் வைத்திய சேவையை வழங்கத் திறந்திருக்கும் எனத் தெரியவருகிறது.

மேற்படி வைத்தியசாலை, தனியாருக்குச் சொந்தமான வீடொன்றில் இயங்கிக்கொண்டிருப்பது குறிப்பிடத்தக்கது.


வாழ்க வளமுடன்



HAPPY BIRTHDAY

முதலாவது அகவையில்



பெயர்கள் : அ.தனுசியன்

முகவரி : காளி கோயிலடி, கொக்குவில்.

எட்டாவது அகவையில்



பெயர் : அ.டிலானி

முகவரி : பூநகரி.

பல்லாண்டு காலம் வாழ்கவென வாழ்த்துகின்றோம்

வாழ்க வளமுடன்



சிறாரின் பெயர்:----------------------------------------

முகவரி :----------------------------------------

பிறந்த ஆண்டு:----------------------------------------

கூப்பன்கள் பத்தும், புகைப்படமும் இத்துடன் இணைக்கப்பட்டுள்ளன.

--------------------

பெற்றார் ஒப்ப..

# இனைய ஈ - இன்பம்

(சென்றவாரத் தொடர்ச்சி...)

மொழி, கலை, கலாசாரம், பண்பாடு, பொழுதுபோக்கு, வேறு அரட்டைகள், தமிழ் நாட்டின் அரசியல் முதல் சந்திரிகாவின் தொப்பி பிரட்டல்கள் அனைத்தையும் பார்த்துப் படித்து மகிழலாம், அறிந்து கொள்ளலாம்.



அடுத்தவர்களின் கலந்துரையாடல்களைப் படித்தே, பல விடயங்களைத் தெரிந்துகொள்ளலாம். அத்தனை 24 மணிநேர வானொலிகளையும், சர்வதேச வானொலிச் சேவைகளையும் நேரடியாகக் கேட்டு மகிழலாம். 24 மணி நேரமும் சிரித்து மகிழலாம்... புரிகிறது. ஆங்கிலம் தெரியாதே என்று யோசிக்கிறீர்கள். ஐயையோ... நான் சொல்லமறந்துவிட்டேன். இப்போதெல்லாம் ஆங்கிலம் மென்வலையில் அதிகம் தேவையில்லை. ஆச்சரியப்படுகிறீர்களா?

உண்மைதான். ஏற்கனவே நான் சொன்னதைப் போல், கணினி வாங்கும் இடத்தில், அதன் அடிப்படைகளை (தமிழில்) அறிந்து கொண்டு வந்துவிட்டால், பின்னர், எல்லாம் தமிழிலேயே பார்க்கலாம், படிக்கலாம், அரட்டை அடிக்கலாம், சிரித்து மகிழலாம். குழப்பங்கள், சந்தேகங்களைத் தமிழிலேயே கேட்டு, அறிந்து திருத்திக்கொள்ளலாம். இப்போது மகிழ்ச்சிதானே!!



"தேடல் உள்ள உயிர்களுக்கே வாழ்வில் பசியெடுக்கும்" என்ற புதுக்கவிதைக்கு ஒப்ப, எப்போதும் தேடுவோம். நல்லவற்றையே தேடுவோம், நல்லவையே கிடைக்கும். அன்னம் என்ற பறவையின் ஒப்புவமை எமக்குப் பொருந்தினால், அதை அழகாக அணிந்துகொண்டு, நீரை விலக்கி, பாலைப் பருகி, பழையன களைந்து, புதுயுகம் புகுந்து, விஞ்ஞானப் புதுமைக்குள் எம் மெய் ஞானம் வளர்த்து, வாழ்கின்ற காலம்வரை இனிதாக ஈ-தளத்தில் வாழ்ந்திடுவோம். ஈ-னிய வாழ்த்துக்கள்! ★

குயின்ரஸ் துரைசிங்கம்

# பொது அறிவுத் துளிகள்

1. நாக்கு இல்லாத விலங்கு எது?
   முதலை.
2. முட்டையிட்டுக் குஞ்சு பொரித்துப் பாலூட்டும் விலங்கு எது?
   எட்கிட்னா.
3. முதன்முதலில் செயற்கைக்கோள்களை விண்ணுக்கு அனுப்பிய நாடு எது?
   ரஷ்யா.
4. எவரெஸ்ட் சிகரத்தை முதலில் அடைந்தவர் யார்?
   டென்சிங்.
5. நோர்வே நாட்டின் நாடாளுமன்றத்தின் பெயர் எது?
   ஸ்டோர்டிங்.

உ. சிவாணி
தரம் 9 - வட்டு. மத்திய கல்லூரி.

# யானை

நிலவாழ் உயிரினங்களில் பிரமாண்டமான மிருகம் யானை. யானைகளில் இரண்டு வகை - ஆசிய யானை, ஆபிரிக்க யானை. இவற்றில் ஆபிரிக்க யானைதான் பெரியது.

சுத்த சைவமான யானைகள்- மூங்கில், கரும்பு போன்றவற்றைக் கிலோக்கணக்கில் உள்ளேதள்ளும்.

யானைகள் சரியாக எழுபது வருடங்கள்வரை வாழும். சிலசமயம் இன்னும் அதிககாலம் வாழும். மிருகக்காட்சிசாலை ஒன்றில் எண்பத்தாறு வருடங்களுக்குமேல் எந்த நோயுமின்றி வாழ்ந்து வந்தது ஒரு யானை. அதன் பெண் யானை இறந்த சிறிது நாட்களுக்குள், பிரிவுத் துயர் தாளாமல் இறந்துவிட்டது. சாகும்வரை ஒரே இணையுடன் வாழ்பவை யானைகள்.

பதின்மூன்று, பதினான்கு வயதில் குட்டிபோடத் தொடங்கும்



யானைகள், ஐம்பது வயதுவரை தொடரும். குட்டிகளுக்கிடையே 2 1/2 - 4 வருட இடைவெளி இருக்கும். சிலசமயம் இரட்டைக் குட்டிகள்கூடப் பிறக்கும்.

பிறந்த குட்டிகள் சுமார் 77 முதல் 113 கிலோகிராம்வரை இருக்கும். ஆனால், பெரிய யானையின் எடையில் அது வெறும் 2 - 4 வீதம் மட்டும்தான்.

யானைகளின் கர்ப்ப காலம் மிக அதிகம். மொத்தம் 22 மாதங்கள்.

யானைகள் மிகமிக சுவாரஸ்யமான விலங்குகள். மனிதர்களைப்போல அழும், சிரிக்கும், விளையாடும். அதுமட்டுமல்ல-

## சில அறிவியல் தகவல்கள்

நாம் நம்பவே முடியாதளவிற்கு அவற்றுக்கு நினைவாற்றல் அதிகம்.

யானைகள் தங்கள் துதிக்கைகளுக்காகப் பிரபலமானவை. 'பேரன் குவியர்' என்ற ப்ரெஞ்சு விஞ்ஞானி, யானையின் துதிக்கையில் மொத்தம் 40,000 தசைகள் உள்ளதைக் கண்டுபிடித்தார். (மனித உடலில் மொத்தத் தசைகளின் எண்ணிக்கை வெறும் 639 தான்)

எல்லோரும் நினைப்பதுபோல், யானைகள் தங்கள் தும்பிக்கைகளால் தண்ணீர் குடிப்பதில்லை. மாறாக அவற்றில் நீர் நிரப்பி வாய்க்குள் விட்டுக்கொள்ளும். தன் தும்பிக்கைக்குள் சுமார் நான்கு லீட்டர்வரை யானையால் உறிஞ்சமுடியும்.

ஆபிரிக்க யானையின் துதிக்கையில் இரண்டு விரல்கள் இருக்கும். இதன்மூலம் பொருட்களைப் பிடிக்கமுடியும். ஆசிய யானையின் தும்பிக்கையில் ஒரு விரல் மட்டுமே இருக்கும். இதன்மூலம் பொருட்களை உரிக்க மட்டுமே முடியும். இவ்வளவு உபயோகம் உள்ள துதிக்கையில் பாதிப்பு வந்தால், யானை உயிர் வாழ்வதே சிரமமாகிவிடும்.

ஆபிரிக்க யானையின் காதுகள் மிகப் பெரியவை. ஆசிய யானையின் காதுகளைவிட, மூன்று மடங்கு பெரியதாக இருக்கும். யானையின் உடல்வெப்பத்தைக் கட்டுப்படுத்துபவை காதுகள்தான்.

இங்கே மடிக்கவும்



# முட்டாள் முயலும்

பல்வேறு மிருகங்கள் கொண்ட பெரிய காடு அது. அங்கே பனைமரத்தடியில் படுத்திருக்கும் முயல், திடீரென்று ஒருநாள்- "இந்த உலகம் அழிந்துபோனால் நம் கதி என்ன?" என்று சிந்திக்கலாயிற்று.

அப்போது வில்வமரத்திலிருந்து, ஒரு வில்வங்காய் அந்தப் பனைமரத்தின் ஓலைமீது விழுந்த சத்தம் பலமாகக் கேட்கவே- முயல் பயந்துபோய், "உலகம் பாரம் தாங்காமல் கீழே விழுந்து உடைந்துவிட்டது" என்று நினைத்தது. பயத்தில் ஓட ஆரம்பித்தது.

அதைக் கண்ட மான்கள், கரடிகள், யானை, புலி, காட்டெருமை, காண்டாமிருகம், சிங்கம் என எல்லா மிருகங்களும்



ஒன்றன்பின் ஒன்றாக ஓடின. இப்படி ஓடியவை "உலகம் உடைந்துவிட்டது" எனக் கத்திக்கொண்டே ஓடலாயின.

# புத்திசாலி சிங்கமும்

அப்போது சிங்கம் ஒரு புதர் அருகே படுத்துக்கொண்டிருந்தது. அதன் காதில் மிருகங்கள் ஒன்றாகச் சேர்ந்து கத்தும் "உலகம் உடைந்துவிட்டது" என்ற சத்தம் விழுந்தது. உடனே அந்த வனராஜன் வேகமாக ஓடி ஒரு குன்றின் மேல் ஏறிநின்றுகொண்டு, மூன்று முறை கர்ஜித்தது. அந்தக் கர்ஜனையைக் கேட்ட எல்லா மிருகங்களும் நின்ற இடத்திலேயே நின்றன, திகைத்தன.

சிங்கம் அம்மிருகங்களைப் பார்த்து, "நண்பர்களே! எல்லோரும் பயந்தபடி எங்கே இப்படி ஓடுகிறீர்கள்? உங்களுக்கெல்லாம் என்னவாயிற்று? என்று பரிவுடனும், கம்பீரத்துடனும் வினாவியது. அவை "உலகம் அழிந்துகொண்டிருக்கின்றது" என்றன. "யார் உலகம் அழிவதைப் பார்த்தது? என்று சிங்கம் கேட்டது.

சில மிருகங்கள் "யானைகளுக்குத் தெரியும்" என்றன.

யானைகள் "சிங்கங்களுக்குத் தெரியும்" என்றன.

சிங்கங்கள் "புலிகளுக்குத் தெரியும்" என்றன.

"கரடிகளுக்குத் தெரியும்" என்றன புலிகள்.

"காண்டாமிருகங்களுக்குத் தெரியும்" என்றன கரடிகள்.

"காட்டெருமைகளுக்குத் தெரியும்" என்றன காண்டாமிருகங்கள். "மான்களுக்குத் தெரியும்" என்றன காட்டெருமைகள்.

மான்களைக் கேட்டால், எங்களுக்குத் எதுவுமே தெரியாது "முயல்களுக்குத்தான் தெரியும்" என்றன. முயல்களைக் கேட்டாலும் முதலில் ஓடிய முயலைச் சுட்டிக்காட்டி "இந்த முயல்தான் முதலில் உலகம் அழிந்துகொண்டிருப்பதாகக் கூறியது" என்றன. அந்த முயலை முதுகில் ஏற்றிக்கொண்டு, சிங்கம் வில்வ மரத்தைச் சென்றடைந்தது.

கீழே தேடியபோது, வில்வம் பழமொன்று பனைமரத்தின் ஓலைமீது விழுந்து, கீழே சிதறிக்கிடந்ததைப் பார்த்தது.

"உலகம் விழவுமில்லை, உடையவுமில்லை - இதோ இந்த வில்வப்பழம்தான் விழுந்திருக்கிறது" என்று கூறி, எல்லோரையும் பயத்திலிருந்து மீட்டது.



# சிறுவர் அரங்கம்

## நாடுகளைத் தெரிந்துகொள்வோம்

### சீனா

வாராவாரம் தெரிந்துகொள்ளும் நாடுகளின் வரிசையில் - இந்த வாரம் நீங்கள், உலகில் அதிகமக்கள் தொகையைக் கொண்ட சீனாவைப் பற்றி அறிந்துகொள்ளப் போகிறீர்கள்.

| | | |
|---|---|---|
| தலைநகரம் | - | பீகிங். |
| பரப்பளவு | - | 95 இலட்சத்து 61 ஆயிரம் சதுர கி.மீ. |
| மொழி | - | மண்டரீன் மொழி மற்றும் வட்டார மொழிகள் (மண்டரீன் மொழியே உலகில் அதிகமானோரால் பேசப்படும் மொழி என்பது குறிப்பிடத்தக்கது). |
| எழுத்தறிவு | - | 70 சதவீதம். |
| சமயங்கள் | - | பௌத்தம், கன்பியூஷியனிசம், டாவோயிசம். |
| நாணயம் | - | யுவான். |



சீன ஜனாதிபதி. ஜியாங் செமின்

உலகில் அதிக சனத்தொகை கொண்ட இந்த நாடு - நடைமுறைப்படுத்தியுள்ள ஒரு குடும்பத்துக்கு, ஒரு குந்தை என்ற திட்டத்தால், இந்த நூற்றாண்டில் சனத்தொகை கட்டுப்படுத்தப்பட்டு வரும் என எதிர்பார்க்கப்படுகிறது.

பரப்பளவில் உலகின் மூன்றாவது பெரியநாடு சீனாதான். 21 மாகாணங்களையும், ஐந்து சுயாட்சிப் பகுதிகளையும், பீகிங், ஷாங்காய், டியன்ட்சின் ஆகிய மூன்று விசேட நகர்ப்பகுதிகளையும் கொண்டிருக்கிறது இந்த நாடு.

உலகின் தொன்மையான நாடுகளில் ஒன்றான சீனா - 1911 ஆம் ஆண்டில் குடியரசாகப் பிரகடனப்படுத்தப்பட்டது. 1949 ஒக்ரோபர் முதலாம் திகதி சீனா மக்கள் குடியரசானது. 1971 இல்தான், இந்த நாடு ஐ.நா.சபையில் அங்கத்துவம் பெற்றது.




அடிப்படையில் ஒரு விவசாய நாடான சீனாவின் முக்கியமான விளைபொருட்கள் - அரிசி, தானியங்கள், தேயிலை, புகையிலை, கரும்பு, சணல், சோயா பீன்ஸ், கச்சான் ஆகியனவாகும்.

இதைவிட முக்கிய தொழிற்துறைகளாக - பருத்தி, கம்பளி, இரும்பு, தோல், மின்சார உபகரணங்களின் உற்பத்திகளைக் குறிப்பிடலாம். இங்கு நிலக்கரி, மங்கனஸ், இரும்புத்தாது, தங்கம், செம்பு, ஈயம், வெள்ளி, பாதரசம், தகரம் போன்ற முக்கிய கனிமப்பொருட்களும் கிடைக்கின்றன. பெற்றோலிய உற்பத்தித் தொழிலும் வேகமாக வளர்ச்சி பெற்றுவருகின்றது.

அணுசக்தி வசதிகளைக் கொண்ட இந்த நாடு - விண்வெளித் தொழில்நுட்பம் உள்ளிட்ட தொழில்நுட்பத் துறைகளில் மிகவும் வேகமாக முன்னேறி வருகின்றது. 1970 இல் சீனா தனது முதலாவது விண்கலத்தை ஏவியது.

# இளந்தேனீக்கள் கழகம் அங்கத்தவர்கள்



முழுப்பெயர் :- பா.குருபரன்
கற்கும் பாடசாலை :-
கொக்குவில் இந்துக் கல்லூரி
கற்கும் தரம் :- 10
ஆர்வமுள்ள துறைகள் :-
கிரிக்கெட், சதுரங்கம், தொலைக்காட்சி பார்த்தல்.



முழுப்பெயர் :- அ.அபிலா
கற்கும் பாடசாலை :-
நெடுந்தீவு மகா வித்தியாலயம்
கற்கும் தரம் :- 9
ஆர்வமுள்ள துறைகள் :-
தொலைக்காட்சி பார்த்தல், வானொலி கேட்டல், பத்திரிகை வாசித்தல்.



முழுப்பெயர் :- சு.சிந்துஷன்
கற்கும் பாடசாலை :-
சாவகச்சேரி இந்துக் கல்லூரி
கற்கும் தரம் :- 9
ஆர்வமுள்ள துறைகள் :-
சித்திரம், பொது அறிவு.



முழுப்பெயர் :- த.தாட்சாயினி
கற்கும் பாடசாலை :-
உடுப்பிட்டி மகளிர் கல்லூரி
கற்கும் தரம் :- 5
ஆர்வமுள்ள துறைகள் :-
பத்திரிகை வாசித்தல், சிறுகதைகள் வாசித்தல்.

முழுப்பெயர்:- மு.மாதினி
கற்கும் பாடசாலை :-
கன்னியர் மடம் மகா வித்தியாலயம்
கற்கும் தரம் :- 8
ஆர்வமுள்ள துறைகள் :-
பத்திரிகை வாசித்தல், நடனம், தமிழ்.

முழுப்பெயர்:- த.நிரோஜன்
கற்கும் பாடசாலை :-
நெடுந்தீவு மகா வித்தியாலயம்
கற்கும் தரம் : 9
ஆர்வமுள்ள துறைகள் :-
சித்திரம் வரைதல், பத்திரிகை வாசித்தல், கணிதம்.

முழுப்பெயர்:- இ.சர்மிளா
கற்கும் பாடசாலை :-
வேலணை மேற்கு நடராஜ வித்தியாலயம்
கற்கும் தரம் :- 10
ஆர்வமுள்ள துறைகள் :-
பத்திரிகை வாசித்தல், வானொலி கேட்டல், தொலைக்காட்சி பார்த்தல்.

# இளந்தேனீக்கள் கழகம்

நீங்கள் பதினைந்து வயதுக்குட்பட்டவரா?

அப்படியானால் நீங்களும் நமது ஈழநாடு சிறுவர் அரங்க 'இளந் தேனீக்கள்' கழகத்தில் அங்கத்தவராகலாம்.

இளந்தேனீக்கள் கழகம் உங்கள் ஆற்றலையும் திறன்களையும் வெளிப்படுத்தத் தயாராக இருக்கின்றது.

நீங்கள் செய்யவேண்டியது இதுதான்.

கீழ் உள்ள படிவத்தைப் பூரணப்படுத்தி உங்களின் தெளிவான புகைப்படம் ஒன்றுடன் எமக்கு அனுப்பி வையுங்கள்.

உங்கள் விபரங்கள் புகைப்படத்துடன் சிறுவர் அரங்கத்தில் பிரசுரமாவதுடன் இளந் தேனீக்கள் கழக உறுப்பினர் அட்டை விரைவில் உங்கள் வீடு தேடிவரும்.

விண்ணப்பங்கள் அனுப்பவேண்டிய முகவரி:-

இளந்தேனீக்கள் கழகம்
சிறுவர் அரங்கம்
நமது ஈழநாடு
267,நாவலர் வீதி,
யாழ்ப்பாணம்.

# இளந்தேனீக்கள் கழகம்

## விண்ணப்பம்

முழுப் பெயர் :.............................................
கற்கும் பாடசாலை :.............................................
கற்கும் தரம் :.............................................
வீட்டு முகவரி :.............................................
பிறந்த திகதி :.............................................
ஆர்வமுள்ள துறைகள் :.............................................
:.............................................

.................. திகதி .................. ஒப்பம்

.................. அதிபர்/ஆசிரியர் ஒப்பம் .................. பெற்றோர் ஒப்பம்

## அதிசயங்களும் அவை அமைந்துள்ள இடங்களும்

| | | |
|---|---|---|
| 1. பிரமிட்டுக்கள் | - | எகிப்து |
| 2. தாஜ்மஹால் | - | இந்தியா |
| 3. பெருஞ்சுவர் | - | சீனா |
| 4. சுதந்திரச் சிலை | - | நியூயோர்க் துறைமுகம் |
| 5. நயாகரா நீர்வீழ்ச்சி | - | வட அமெரிக்கா |
| 6. சாய்ந்த கோபுரம் | - | இத்தாலி |
| 7. தொங்கு தோட்டம் | - | பபிலோனியா |

லோ.தேனுகா,
மாணிக்கவாசகர் வித்தியாலயம், கரவெட்டி.

இங்கே மடிக்கவும்






# விடுகதைகளும் விடைகளும்

1. மரத்திலே காய்க்காத பழம் அது என்ன பழம்? ஐஸ்பழம்.
2. அழுதழுது கடைசிவரை ஒளி தருவான். அவன் யார்? மெழுகுவர்த்தி.
3. சிவப்புநிறப் பைக்குள் சில்லறைக் காசுகள். அது என்ன? செத்தல் மிளகாய்.
4. சிவப்புநிறச் சிங்காரியைத் தூக்கமுடியாது. அது என்ன? நெருப்பு.
5. போகப்போகப் போய்க் கொண்டிருக்கும். அது என்ன? ஆகாயம்.

அ.கிரிஷாந்தினி, உடுப்பிட்டி மகளிர் கல்லூரி.

1. ஐந்து வீட்டுக்கு ஒரு முற்றம். அது என்ன? உள்ளங்கை.
2. தின்றால் துவர்ப்பு, தண்ணீர் குடித்தால் இனிப்பு. அது என்ன? நெல்லிக்காய்.
3. அண்ணன் தம்பி இருவர், அவர்கள் சுற்ற வேண்டியதோ பன்னிருவர். அவர்கள் யார்? கடிகாரம்.
4. ஒரு கூட்டுக்குள் இருவர் அணி. அது என்ன? முட்டை.
5. இரவினில் ஆட்டம், பகலினில் ஓட்டம். அது என்ன? நிலா.

ம. சிவகௌரி,
பண்டத்தரிப்பு மகளிர் உயர்தரப் பாடசாலை,
தரம் 5.



# உங்கள் கைவண்ணம்



ர.நிலங்கன், தரம் - 9, சாவகச்சேரி இந்துக் கல்லூரி.

# பூனை



எங்கள் வீட்டுப் பூனையாம்
எழில்மிகுந்த பூனையாம்
எட்டி எட்டிப் பாயுமாம்
எலியைக் கண்டால் பிடிக்குமாம்
பாலை விரும்பிக் குடிக்குமாம்
பசியைத் தன்னைப் போக்குமாம்.

தீ.ஜெனத்குமரன்
கோப்பாய் றோ.க.த.க.பாடசாலை

கீழுள்ள நான்கு எலிகளில், எந்த எலிக்குத் தட்டிலுள்ள சாப்பாடு கிடைக்கும்? கண்டுபிடியுங்கள் பார்க்கலாம்.



நமது ஈழநாடு
267, Navalar Road, Jaffna.
T.P. - 021-2225107 www.eezhanadu.com

**சிந்தனைக்கு**

*செய்தக்க அல்ல செயக்கெடும் செய்தக்க*
*செய்யாமை யானும் கெடும்.*

*திருக்குறள்.*

## நமது நோக்கு

### அங்கீகாரமும் அமைதியும்!

விடுதலைப் புலிகளின் கட்டுப்பாட்டில் கடற்பரபபிருப்பதை அரசாங்கம் அங்கீகரிக்கவேண்டுமென்ற கோரிக்கை, போர்நிறுத்தக் கண்காணிப்புக் குழுவின்ரால் அரசின்முன் வைக்கப்பட்டுள்ளது.

வட - கிழக்குக் கடற்பிராந்தியம் - தொடர்ந்தும் மோதல் அபாயமுள்ள பகுதியாகவும், கடற்படையின் போர்நிறுத்த மீறல்களுக்கான பிரதேசமாகவும் இருந்து வரும் நிலையில்,

தரையில் ஏற்படுத்தப்பட்டுள்ள போர்நிறுத்த அமைப்பையொத்ததாக, கடற்பகுதிகளிலும் - விடுதலைப் புலிகளின் கட்டுப்பாட்டுப் பகுதிகள் அங்கீகரிக்கப்படுமாக இருந்தால் -

அது அநாவசியமான பிரச்சினைகளுக்கு இடந்தராது என்றவகையில், கடற்புலிகள் முன்வைத்துள்ள இந்த யோசனை - அரசாங்கத்தால் ஏற்றுக்கொள்ளப்பட வேண்டிய யதார்த்தத்தைக் கொண்டிருக்கிறது.

விடுதலைப் புலிகளின் கடற்புலிகள் அமைப்பு, ஒரு கடற்படைக்குரிய சகல தகுதிகளுடனும் தனியானதொரு கடற்பிரிவாகத் தொழிற்படுகையில் - அந்த யதார்த்தத்தை அரசாங்கம் ஏற்றுக்கொள்வதன் மூலமே, அங்கீகரிப்பதன் வழியாகவே - கடலிலும் சுமுகநிலையைத் தோற்றுவிப்பதற்கான அடித்தளமிடமுடியும் என்பது தெளிவானது.

இதனையே, போர்நிறுத்தக் கண்காணிப்புக்குழுவின் தலைவர் ட்ரைகேவ் ரெலவ்சன், அண்மையில் கொழும்புப் பத்திரிகையொன்றுக்கு அளித்த பேட்டியிலும் - இந்த யதார்த்தத்தை அரசாங்கம் ஏற்றுக்கொள்ள வேண்டிய தேவைபற்றிக் குறிப்பிட்டிருந்தார்.

'விடுதலைப் புலிகளின் கடற்புலிகள், ஒரு கடற்படைப் பிரிவுக்குரிய அம்சங்களைக் கொண்டிருக்கும்போது - இந்த உண்மையைப் புறம்நீக்கி அல்லது அவர்களை மேசைக்கு அடியில் வைத்துக்கொண்டு - கடற்பிரச்சினைகள் பற்றிப் பேசமுடியாது. அவ்வாறு பேசுவது தீர்வையும் பெற்றுத் தராது' என்று கூறியிருந்தார் ரெலவ்சன்.

அண்மையில், முல்லைத்தீவுக்கு நேரடியாக விஜயம் செய்து - கடற்புலிகளின் விசேட தளபதியுடன் நடாத்திய பேச்சுக்கள் மூலமும், அங்கு - கடற்புலிகள் கொண்டிருக்கின்ற படைப்பலத்தை அவதானித்ததன் மூலமும் - வன்னிக்கான விஜயத்துக்கு முன்னர் தான் கொண்டிருந்த இந்த நிலைப்பாட்டில், இப்போது - ரெலவ்சன் மேலும் உறுதிகொண்டிருப்பார் என்றே எதிர்பார்க்கலாம்.

வட - கிழக்குக் கடற்பிரதேசங்களில் - கடற்புலிகள் - தமது கட்டுப்பாட்டுப் பிரதேசங்களைக் கொண்டிருப்பதையும், கடற்புலிகள் தனியானதொரு கடற்படைப் பிரிவென்பதையும் ஏற்றுக்கொள்வதை அரச தரப்பு மறுக்குமானால், கடற்பிராந்தியத்தில் படைச் சமநிலையைப் பேணுவதும் - அதன்மூலம் முறுகல்நிலை ஏற்படுவதைத் தவிர்த்துக்கொள்வதும் சிக்கலுக்குரியதாகவே தொடர்ந்திருக்கும்.

ஏற்கனவே - சர்வதேசக் கடலில் இடம்பெற்றுள்ள போராளிகளின் வர்த்தகக் கப்பல்கள் தாக்கப்பட்ட சம்பவங்களும், நெடுந்தீவுக் கடலில் கடற்படையினரால் கைதாக முற்பட்டவேளை - போராளிகள் உயிர்துறக்க வேண்டி வந்ததும், இன்னமும் நடந்துவரும் கடற்படையன் அடாவடிகளும், தலையீடுகளும் - அமைதிச் சூழ்நிலைக்குப் பெரும் அச்சுறுத்தலாக அமைந்தன என்ற உண்மையை அரசாங்கம் தயக்கமின்றி ஒப்புக்கொள்ளுமானால் -

இனி, எதிர்காலத்திலாவது அத்தகைய சம்பவங்கள் மீண்டும் இடம்பெறாமல் தடுப்பதற்கு ஆக்கபூர்வமாகச் செய்யவேண்டியவை பற்றி அது சிந்தித்துக் கொள்ளலாம்.

கடற்பகுதிக்குள் நடக்கும் மீறல்கள், விடுதலைப் புலிகளை ஆத்திரமூட்டக்கூடியதாக அமைந்ததை, தீவிரமாக அரசாங்கத் தரப்புக் கவனத்தில் கொள்ளுமிடத்திலேயே - இந்த விவகாரத்தில் உடனடி நடவடிக்கைகள் அவசியமாக இருப்பதை அதனால் உணர்ந்துகொள்ளவும் முடியும்.

ஆனால் - அரசாங்கத்தின் போக்கோ, கடற்படையின் நடவடிக்கைகளைக் கட்டுப்படுத்தத் திராணியற்றிருப்பதோடு,

கடற்படையை மேலும் மேலும் பலப்படுத்தி, அதன் தாக்குதிறனை அதிகரிக்கச் செய்வதான ஆயுதக்கொள்வனவுகளிலேயே நாட்டம் காட்டுவதாகத் தெரிகின்றது.

அதேவேளை - கடற்படைக்குள் எழுந்துள்ள முரண்பாடுகளும், பதவிப் போட்டிகளும் - விடுதலைப் புலிகளின் எண்ணெய்த் தாங்கிக் கப்பல் தாக்கப்பட்டதான சம்பவம் வரை பாதிப்பைத் தருமளவுக்கு வளர்ந்திருப்பதும் - கடற்படையைக் கட்டுப்படுத்துவது யார் என்ற கேள்விகளையும் எழுப்பியுள்ளது.

எனவே - கடற்பிராந்தியத்தில் அமைதியை ஏற்படுத்துவதற்கும், அதனூடாக சமாதான முயற்சிகளை நிலைபெறச் செய்வதற்கும் - அரசாங்கம் செய்யவேண்டியன ஏராளமாகவே உள்ளன.

அதற்கு முன்னோடியாக - கடற்புலிகளின் பிரதேசங்களை அங்கீகரிப்பதோடு, கடற்படையும் போர் நிறுத்த உடன்பாட்டுக்கமைவாக நடந்துகொள்வதற்குரிய நடவடிக்கைகளை அரசாங்கம் செய்யுமானால் மட்டுமே - கடலில் சுமுகநிலை சாத்தியமாகத் தொடங்கும்.

---

**பதவியிலிருந்து விலகிச்செல்ல அனுமதிக்கக் கோரிய**

# தேர்தல் ஆணையாளர் மனுவை உயர்நீதிமன்றம் நிராகரித்தது!

(கொழும்பு)

தேர்தல் ஆணையாளர் பதவியிலிருந்து விலகிச்செல்வதற்குத் தன்னை அரசாங்கம் அனுமதிக்கவில்லை எனவும் - இது, தனது அடிப்படை மனித உரிமையை மீறும் செயல் எனவும், தேர்தல் ஆணையாளர் தயானந்த திஸநாயக்க தாக்கல் செய்த மனுவை உயர்நீதிமன்றம் நிராகரித்திருக்கிறது.

பதவிக்காலம் முடிந்தபின்பு தனது விருப்பத்திற்கு மாறாகத் தொடர்ந்து பதவியில் நீடிக்குமாறு அரசாங்கம் உத்தரவு பிறப்பித்ததைத் தொடர்ந்து, தான் இந்த மனுவைத் தாக்கல் செய்ததாக, தேர்தல் ஆணையாளர் தயானந்த திஸநாயக்க உச்சநீதிமன்றத்தில் தொடர்ந்த வழக்கில் தெரிவித்திருந்தார்.

இந்த வழக்கை விசாரித்த பிரதம நீதியரசர் சரத் என். சில்வா தலைமையிலான நீதியரசர் குழு, தேர்தல் ஆணையாளர் தயானந்த திஸாநாயக்கவின் மனு - அரசியல் யாப்புடன் சம்பந்தப்பட்ட விடயம் என்பதால், இதில் அவருக்கு தாங்கள் எந்த உதவியும் செய்யமுடியாமல் இருப்பதாகக் கூறி, அந்த மனுவை நிராகரித்திருக்கிறது.

தேர்தல் ஆணையாளர் தயானந்த திஸநாயக்க தாக்கல் செய்த மனுவில் - தாம், பதவியில் இருந்தபோது, ஐந்துமுறை இதயநோய்த் தாக்கத்திற்குள்ளானதாகவும், அதனால் கடமையை ஆற்றமுடியாத பட்சத்தில், ஓய்வு பெறுவதற்குத் தான் விண்ணப்பித்திருந்தபோதும், தான் வகித்து வருகின்ற பதவிக்கு இன்னுமொருவர் மாற்று ஏற்பாடாக ஜனாதிபதியால் நியமிக்கப்படாததால், தன்னால் பதவி விலக முடியாதுள்ளதாகவும் குறிப்பிட்டிருந்தார்.

அத்துடன், தனது கோரிக்கையை ஏற்று, தான் ஓய்வுபெற்றுச்செல்ல அனுமதிக்குமாறு அரசாங்கத்திற்கு பணிப்புரை விடுக்குமாறும் தேர்தல் ஆணையாளர் தயானந்த திஸநாயக்க தனது மனுவில் தெரிவித்திருந்தது குறிப்பிடத்தக்கது.

தனது விருப்பத்திற்கு மாறாக பதவி நீடிப்பு உத்தரவை அரசாங்கம் வழங்கியதற்காக, பத்து மில்லியன் ரூபா நஷ்டஈடு கோரியும் தனது மனுவில் குறிப்பிட்டிருந்தார்.

ஆனால் - தேர்தல் ஆணையாளர் நியமன விடயத்திலும் அவருக்கு வழங்கப்படுகின்ற பதவி நீடிப்பு சம்பந்தமான விவகாரங்களிலும் - அரசியல் யாப்பிற்கு உட்பட்டே கருமங்கள் ஆற்றப்படவேண்டி இருப்பதனால், உயர்நீதிமன்றம் இந்தப் பிரச்சினைகளில் எவ்விதத்திலும் தலையீடு செய்து, பணிப்புரை எதையும் விடுக்கமுடியாதுள்ளதாக பிரதம நீதியரசர் சரத் என்.சில்வா தனது தீர்ப்புரையில் தெரிவித்திருக்கின்றார்.

இதனைத் தொடர்ந்து - தேர்தல் ஆணையாளரான தயானந்த திஸாநாயக்க தொடர்ந்தும் அப்பதவியில் இருப்பார் என, நீதிமன்றம் தனது உத்தரவில் குறிப்பிட்டிருக்கின்றது. (க)

## மே மாத உலருணவு நிவாரணம் இம்மாத இறுதியில் விநியோகம்

(யாழ்ப்பாணம்)

மே மாதத்திற்குரிய உலர் உணவு நிவாரணம், இம்மாத இறுதியில் விநியோகிக்கப்படவுள்ளது.

மே மாதத்திற்குரிய இடம்பெயர்ந்தோர் நிவாரணத்தினை விநியோகம் செய்வதற்கென யாழ். செயலக புனர்வாழ்வுக் கிளையினரால் உலர் உணவுப்பொருட்கள் கூட்டுறவுச் சங்கங்களுக்கு அனுப்பிவைக்கப்பட்டுள்ளன.

அனைத்து கூட்டுறவு சங்கங்களுக்கும், மே மாதத்திற்குரிய உலர் உணவுப்பொருட்கள் போய்ச்சேர்ந்த பின்னரே, இம்மாத இறுதியில் உலர் உணவு நிவாரணம் மக்களுக்கு விநியோகிக்கப்படவுள்ளது.

# பாடசாலை மாணவர்கள் மத்தியில் புதிதாகப் பரவும் வைரஸ் காய்ச்சல்

பாடசாலை மாணவர்களிடையே புதிதாக வைரஸ் காய்ச்சல் ஒன்று பரவும் ஆபத்து எழுந்திருப்பதாக கொழும்பிலுள்ள லேடி றிஜ்வே சிறுவர் வைத்தியசாலையின் பணிப்பாளர் எச்சரித்துள்ளார்.

கடந்த சில நாட்களில் மட்டும் லேடி றிஜ்வே வைத்தியசாலைக்கு - ஆயிரத்திற்கும் அதிகமான மாணவர்கள் இந்த வைரஸ் காய்ச்சலால் பாதிக்கப்பட்டு, சிகிச்சைக்காக வந்திருப்பதாக அவர் தெரிவித்தார். குறிப்பாக 5 முதல் 14 வயதுக்கிடையிலானவர்களே இந்த புதிய காய்ச்சலினால் பாதிக்கப்பட்டிருப்பதாகவும் அவர் தெரிவித்திருக்கின்றார்.

இந்தக் காய்ச்சல் உயிராபத்தை ஏற்படுத்தக் கூடியதல்ல என்றாலும் - இந்தக் காய்ச்சலினால் பீடிக்கப்பட்ட சிறார்கள் உடனடியாக அருகிலுள்ள வைத்திய நிலையங்களுக்குக் கொண்டுசெல்லப்பட்டு உரிய சிகிச்சைகளுக்கு உட்படுத்தப்படவேண்டும் என்றும், வைத்தியசாலைப் பணிப்பாளர் பெற்றோரைக் கேட்டுள்ளார்.

கடுமையான தலையிடி, நீரிழப்பு ஆகிய அறிகுறிகளைக் கொண்ட இக்காய்ச்சல், மூன்று முதல் ஐந்து நாட்களுக்கு நீடிக்கும் எனவும், நீரிழப்பால் சிறார்களின் உடல்நிலை பாதிக்கப்படுவதைத் தவிர்ப்பதற்காக உடனடியாக வைத்திய சிகிச்சை மேற்கொள்ளப்படுவது அவசியமெனவும் சிறுவர் வைததியசாலை வட்டாரங்கள் தெரிவித்திருக்கின்றன.

இந்தப் புதிய வைரஸ் காய்ச்சல் பற்றித் தகவல் வெளியிட்டுள்ள மருத்துவ வட்டாரங்கள், சுவாசம் மூலமே இந்த வைரஸ் காய்ச்சல் பரவுவதற்கான சாத்தியக்கூறுகள் அதிகம் இருப்பதாகவும், இந்தக் காய்ச்சல் பற்றிய குணங்குறிகள் தென்படுமிடத்து உடனடியாக, பரசிற்றமோல் மாத்திரைகளையும் தொடர்ந்து நீரிழப்பைத் தடுக்கக்கூடிய ஜீவனி போன்ற நீராகாரங்களையும் கிரமமான முறையில் உள்ளெடுக்குமாறும், சிபார்சு செய்துள்ளன.

இந்த புதிய வைரஸ் காய்ச்சல் பற்றி வைத்தியகலாநிதி நிகால் அபயசிங்க தகவல் தெரிவிக்கையில், வழக்கமாக மழைகாலம் ஆரம்பிக்க முன்னர், காலநிலை மாற்றத்தினாலேயே இந்த வைரஸ் காய்ச்சல் பரவும் தன்மையை அவதானித்திருப்பதாகவும், ஒரு குறிப்பிட்ட காலத்திற்கு மட்டுமே இந்த வைரஸ் காய்ச்சல் சிறர்களைப் பாதிக்கக்கூடியதாக இருக்குமெனவும் தெரிவித்தார்.

இப்புதிய வைரஸ் காய்ச்சலினால் பாதிக்கப்பட்ட நூற்றுக்கணக்கான சிறார்கள் கொழும்பிலும் அதனை அண்டியுள்ள பகுதிகளிலும் உள்ள வைத்தியசாலைகளில், தினமும் சிகிச்சை பெற்றுவருவது குறிப்பிடத்தக்கது.

## போரில் சொத்திழந்தோருக்கு நஷ்டஈட்டுக் கொடுப்பனவு!

*செவ்வாயன்று செயலகத்தில் வழங்கப்படுகிறது*

(யாழ்ப்பாணம்)

போரினால் பாதிக்கப்பட்டு சொத்துக்களை இழந்தவர்களுக்கான நஷ்டஈட்டுக் கொடுப்பனவிற்கான காசோலைகள், வரும் செவ்வாய்க்கிழமை யாழ்.செயலக புனர்வாழ்வுக் கிளையால் வழங்கப்படவுள்ளன.

கடந்த காலங்களில் இடம்பெற்ற யுத்தத்தினால் வீடுகள் சேதமடைந்த, சொத்துக்களை இழந்த, அவயவயங்களை இழந்த, மாதாந்தம் 1500 ரூபாவிற்குட்பட்ட வருமானம் பெறுவோருக்கே - நஷ்டஈட்டுக் கொடுப்பனவிற்கான காசோலைகள் வழங்கப்படவுள்ளன.

எதிர்வரும் செவ்வாய்க்கிழமை இடம்பெறும் நிகழ்வில் புனர்வாழ்வு அமைச்சர் டாக்டர் ஜயலத் ஜயவர்த்தன கலந்துகொண்டு பாதிப்படைந்தவர்களுக்கு காசோலைகளை வழங்கவுள்ளார் எனவும் யாழ். செயலக வட்டாரங்கள் தெரிவித்தன.

## தாப்ரூ கொலை அறிக்கை இன்று ஜனாதிபதியிடம்!

தெஹிவளை பொலிஸ் நிலையப் புலனாய்வுப்பிரிவுப் பொறுப்பதிகாரி சுனில் தாப்ரூவின் கொலை தொடர்பான அறிக்கை இன்று ஜனாதிபதியிடம் கையளிக்கப்படவுள்ளது.

இது தொடர்பாக - குற்றப்புலனாய்வுப் பிரிவினரால் தயாரிக்கப்பட்டுள்ள அறிக்கையில், தமிழ் இளைஞன் ஒருவராலேயே திட்டமிட்டு இந்தக் கொலை நடத்தப்பட்டதாகக் குறிப்பிடப்பட்டுள்ளது.

இந்த அறிக்கையும், பொலிஸ் திணைக்கள அறிக்கையும் பொலிஸ் மா அதிபர் ஆனந்தராஜாவால் இன்று ஜனாதிபதியிடம் கையளிக்கப்படவுள்ளது.

# சமாதான முயற்சியில் பெண்களின் பங்கு இருநாள் கருத்தரங்கு இன்று ஆரம்பம்!

(யாழ்ப்பாணம்)

மகளிர் அபிவிருத்தி நிலையம் ஏற்பாடு செய்துள்ள "சமாதான செயற்பாடுகளை முன்னெடுப்பதில் பெண்களின் பங்கு" பற்றிய கருத்தரங்கு இன்றும், நாளையும் யாழ்.இந்து மகளிர் கல்லூரியில் நடைபெறவுள்ளது.

இந்த நிகழ்வில் மல்லாகம் மாவட்ட நீதிபதி சரோஜினி இளங்கோவன், பிரதம விருந்தினராகக் கலந்து கொள்ளவுள்ளார்.

தொடர்ந்து இடம்பெறவுள்ள கருத்துப் பரிமாற்றங்களில்- 'பெண்கள் உரிமைகளை வென்றெடுப்பதில் சமாதானத்தின் பங்கு' பற்றி சட்டத்தரணி பவானி சற்குணராஜாவும், 'கலாசார செயற்பாடுகளினூடாக சமாதானத்தை வலுவூட்டல்' தொடர்பாக, பத்திரிகையாளர் சீதாரஞ்சினியும் கருத்துரை வழங்குவார்கள். இதனைத் தொடர்ந்து குழுக் கலந்துரையாடலும், தென்னிலங்கையிலிருந்து வருகைதரும் பத்திரிகையாளர்களுடனான கலந்துரையாடலும் நடைபெறும்.

நாளை நடைபெறவுள்ள நிகழ்வில் - 'ஊடகங்களினூடாக சமாதானத்தை வலுவூட்டல்' தொடர்பாக பத்திரிகையாளர் மகிந்த கற்றகே கருத்துரை வழங்கவுள்ளார்.

தொடர்ந்து, 'சமாதானத்தை வலுப்படுத்துவதில் மக்கள் பங்கு' என்ற குழுக் கலந்துரையாடல் இடம்பெறும். இதில் 'வீரகேசரி' பத்திரிகையாளர் அ.நிக்ஷன், 'தினக்குரல்' பத்திரிகையாளர் ஆர்.பார்த்தீபன், 'நமது ஈழநாடு' பத்திரிகையாளர் ரி.கலானந்தி ஆகியோர் கலந்துகொள்வர்.

# மறக்கமுடியாத ஜூலைக் கலவரம்

# ஒரு தமிழனின் அனுபவம்

**1983 ஆம் ஆண்டு ஜூலை கலவரமானது பெரும்பாலான, ஈழத்தமிழர்களுக்கு ஒவ்வொரு விதமான அனுபவத்தைக் கொடுத்திருக்கும். அந்தவகையில், தனக்கு ஏற்பட்ட அனுபவத்தை இங்கே மீட்கிறார் ராஜன் சக்திவேல்.**

அப்போது நான் - கொழும்பில் தெமட்ட கொட என்ற இடத்தில், ஒரு சிங்கள வீட்டு அறையொன்றில் வாடகைக்குக குடியிருந்தேன். மருதானையில் அமைந்துளள 'தில்லீஸ் குறூப்' என்ற நிறுவனத்தின் கணக்குப் பகுதியில் கடமையாற்றிக் கொண்டிருந்தேன்.

'தில்லீஸ் குறூப்'பின் கீழே பல வியாபார ஸ்தாபனங்கள் இயங்கின. அவற்றில் ஒன்று - கல்கிசை என்னும் இடத்தில் கடற்கரையை அண்மித்திருந்த, 'தில்லீஸ் பீச் ஹோட்டல்' என்ற வெளிநாட்டு உல்லாசப் பிரயாணிகள்



**1983 ஜூலைக் கலவரத்தைப் பார்வையிடும் அன்றைய ஜனாதிபதி ஜே.ஆரும், பிரதமர் பிரேமதாஸவும்.**

தங்கும் நட்சத்திர ஹோட்டலாகும். அன்று, 1983 ஜூலை 23 ஆம் திகதி என்று நினைக்கிறேன். அதாவது, இனக்கலவரத்துக்கு முதல் நாள். சில கணக்குகள் சம்பந்தமான அலுவல்களுக்காக அங்கே சென்றுவிட்டு, வீடு திரும்ப இரவு எட்டு மணியாகிவிட்டது. கல்கிசையிலிருந்து தெமட்டகொட வரவேண்டுமானால், 154 இலக்க பஸ் எடுக்கவேண்டும். அந்த பஸ் பொரளையினூடாக தெமட்டகொடவுக்குச் செல்லும். பஸ் பொரளையை அண்மித்தபோது, அதன் வேகம் குறைந்தது. அது - பொரளையில், கனத்தை மயானம் அமைந்துள்ள பகுதி. அங்கே பெருந்திரளான மக்களும், பொலிஸாரும் திரண்டிருந்தார்கள். வாகனங்கள் அதற்கப்பால் செல்ல இயலாதவாறு ஒரே சனநெரிசல். திருநெல்வேலியில் பலியான இராணுவச் சடலங்கள் கனத்தை மயானத்தில் அடக்கம் செய்யப்பட இருந்ததால்தான் - அந்தச் சனத்திரள் என்பதை, மறுநாள் என்னால் அறியமுடிந்தது.

பஸ் வேறொரு பாதை வழியாகத் தெமட்டகொடவை அடைய, வீடு செல்லக் கூடியதாக இருந்தது.

மறுநாள் காலை ஏழு மணியிருக்கும் - வீட்டு உரிமையாளர் அவசரமாக அறைக் கதவைத் தட்டும் சத்தம்கேட்டு எழுந்தேன். அந்தச் சிங்களவர் தலையில் கையை வைத்தவாறு, 'தெமட்டகொட சந்தியிலுள்ள தமிழ்க் கடைகள் யாவும் அடித்து நொறுக்கப்படுகிறதென்றும், பெரிய பிரச்சினை ஒன்று கொழும்பில் ஆரம்பமாகிவிட்டது' என்றும் கூறி, என்னை வெளியே போகாமல் பாதுகாப்பாக இருக்குமாறு சொல்லிவிட்டுச் சென்றார்.

ஒரு மணித்தியாலம் கழிந்திருக்கும். வெளியேசென்ற வீட்டு உரிமையாளர் வியர்த்து விறுவிறுக்க வந்தார்.

'தமிழர்களை வைத்திருக்கிற சிங்களவர்களுடைய வீடுகளையும் எரிக்கிறார்களாம். அதனால், நீ இங்கிருப்பது எங்களுக்குப் பயமாக இருக்கிறது' என்றார்.

மாதக் கடைசி, கையில் பணமில்லை, வேலைத்தளத்தில் பணம் கேட்டுப் பார்க்கலாம் என்ற எண்ணத்தில் - மருதானையை நோக்கி விரைந்தேன்.

அநேகமாக வேலைக்கு ஒரு குறுக்குப் பாதை வழியாக நடந்துதான் போவேன். அந்தப் பாதையில் சென்றுகொண்டிருந்த போது, வேகமாக வந்த ஓட்டோ ஒன்று விக்கித்து நின்றது.

அதிலிருந்து வியர்த்து விறுவிறுத்தவாறு இரண்டு சிங்களவர்கள் இறங்கி, என்னைக் கூப்பிட்டு, தங்களுடன் சேர்ந்து அந்த 'ஓட்டோ'வை தள்ளிவிடுமாறு கூறினார்கள். கைகளில் கத்தி, பொல்லுகளுடன், விழிகள் சிவப்பைக் கக்க, விகாரமான முகங்களுடன் நின்றிருந்தவர்களுக்கு, நான் தமிழன் என்று அடையாளம் தெரியவில்லை. தெரிந்திருந்தால், அந்த நேரம் ,என்னுடைய நிலையை நினைதுப் பார்க்கவே முடியாதிருந்தது.



மனதில் பயம் தோன்றினாலும், அந்தச் சூழ்நிலையில் அவர்களுக்கு என்னை இனங்காட்டக் கூடாதென்ற நிலைமையில், அவர்களுடன் ஒருவனாக அந்த 'ஓட்டோ'வைத் தள்ள ஆரம்பித்தேன்.

அந்த 'ஓட்டோ'வினுள் இரண்டு, மூன்று பெரிய 'சூட்கேஸு'கள் அரைகுறையாகத் திறந்தநிலையில் - உடுபுடைவைகளும், நகைகளுமாக வெளியே தெரிந்தன. அந்த 'சூட்கேஸின்' வெளிப்பகுதி எங்கும் ஈரம் காயாத இரத்தக் கறைகள் வியாபித்திருந்து, எங்கோ ஒரு வீட்டில், தமிழுயிர்கள் அந்த இரு காடையரினால் கொடூர அவலத்துக்குள்ளாகி, தமது சொத்துக்களையும் பறிகொடுத்ததை எடுத்தியம்பின. சிலசமயம் அந்த உயிர்களும் பறிபோயிருக்கலாம்.

எனினும் என்ன பயன்?

எனது உயிர்ப் பாதுகாப்புக்காக அந்த 'ஓட்டோ' தொடர்ந்து முன்னேசெல்லக் கைகொடுத்துவிட்டு, கையாலாகாத்தனத்துடன் எனது வேலைத்தளத்தை நோக்கி விரையலானேன்.

அது திறக்கப்படவில்லை. மீண்டும் வீட்டை அடைந்தேன். எனது நிலையைப் புரிந்துகொண்ட அந்த வீட்டு உரிமையாளர், கைச் செலவுக்குச் சிறிதளவு பணத்தைக் கேட்காமலேயே தந்தார்.

எங்கே போவது? எவரிடம் உதவி கேட்பது? யோசித்து முடிவெடுக்க முடியவில்லை.

வீதியால் செல்லும் பஸ்களிலிருந்து - 'ஜய வேவா, ஜய வேவா' என்ற பலநூறு குரலொலிகள் எழுந்து, சூழ்நிலையின் பயங்கரத்தை உணர்த்திக்கொண்டிருந்தன.

வேலைக்கென வந்த மக்கள், தமிழனின் அவலத்தை வேடிக்கை பார்த்தவாறு வீதியெங்கும் கும்பல்கும்பலாக, மெல்லமெல்ல நகர்ந்து கொண்டிருந்தார்கள். அப்போது ஒரேயொரு வழிதான் தென்பட்டது.

கல்கிசையில் அமைந்திருந்த 'தில்லீஸ் பீச்' ஹோட்டலுக்குச் செல்வது என்பதுதான். அது வெளிநாட்டு உல்லாசப் பிரயாணிகளுக்கான 'ஹோட்டல்' என்பதால், அதுவே பாதுகாப்பான இடம் என்று முடிவெடுத்தேன்.

தெமட்டகொடவிலிருந்து கல்கிசைக்குச் செல்லவேண்டும். பொரளையூடாகவும் செல்லலாம். மருதானை ஊடாகவும் செல்லலாம். கலவரம் ஆரம்பமான இடம் பொரளை என்பதால், மருதானை ஊடாகச் செல்ல ஆரம்பித்தேன். நடந்து செல்வதே பாதுகாப்பானதாகத் தோன்றியது.

மருதானை, நகரமணடபம் எல்லாவற்றையும் கடந்து - கொள்ளுப்பிட்டியை அடைந்தபோது, சில நூறு மீற்றர் முன்னால், காடையர் கூட்டமொன்று - தமிழர்களின் பல வர்த்தக ஸ்தாபனஙகளைக் கொள்ளையிட்டு, அவற்றை எரித்தவாறு சென்றுகொண்டிருந்தது.



அவர்களின் பின்னால் 'ஜய வேவா' என்ற கோஷங்களுடன் ஒரு கூட்டம். அவர்களில் பெரும்பாலானவர்கள் வேலைக்கு வந்து, அலுவலகங்கள் திறக்காததால் திரும்பிச் செல்பவர்கள். தமிழரின்மீது நடாத்தப்படும் அராஜகங்களைப் பார்த்து வேதனைப்படும் சிங்கள மக்களும் அந்தக் கூட்டத்தில் இல்லாமலில்லை.

இராணுவத்தினர் - 'ட்ரக்'குகளில் பெற்றோலைக் கொண்டுவந்து அந்தக் காடையர்களுக்கு விநியோகிப்பதையும், 'ஜய வேவா' என்று கத்தி உற்சாகமூட்டுவதையும் காணக் கூடியதாக இருந்தது.

பலசரக்குக் கடைகளைச் சூறையாடி - அதிலிருந்த இனிப்பு, குமிழ்முனைப் பேனா போன்றவைகளை, அந்தக் காடையர்கள் சனஙகளை நோக்கி வீசுவதையும், அவற்றை - அந்தச் சனங்கள் முண்டியடித்தவாறு பொறுக்கி எடுத்து; ஆனந்தம் அடைவதையும் பார்த்தவாறு - மெல்லமெல்ல அவர்களோடு ஒருவனாக நகர்ந்து கொண்டிருந்தேன்.

பம்பலப்பிட்டி என்ற பகுதியை அண்மித்தபோது - காடையரின் தொகையும், தாக்குதல்களும் மிகவும் அதிகரித்துவிட்டது. சுற்றி நிற்கும் கூட்டத்திலே எவராவது தமிழர்கள் உள்ளார்களா என நோட்டமிட ஆரம்பித்துவிட்டார்கள். சுற்றி நிற்கும் மக்களின் ஆதரவும், இராணுவத்தினரின் பெற்றோல் விநியோக உதவியும் - காடையரின் உற்சாகத்தைக் கூட்ட, அவர்களின் வெறியாட்டம் உச்சக் கட்டத்தை அடைந்துகொண்டிருந்தது.

பம்பலப்பிட்டி 'சரஸ்வதி லொட்ஜ்' என்ற, தோசைக்குப் பெயர்பெற்ற அந்தச் சைவக் கடையின் பலகைக் கதவுகளை நொறுக்கித் திறந்து, உள்ளேயிருந்து வேட்டியணிந்த ஒரு பெரியவரை வெளியே இழுத்து வந்து, ஏதோ செய்யுமாறு கட்டளையிட்டார்கள். பாவம் அந்தப் பெரியவர் - அணிந்திருந்த வேட்டியைக் கழற்றி, தலையில் தலைப்பாகையாகக் கட்டிக் கொண்டு, தேகம் நடுங்க, அந்தக் காலி வீதியில் - மண்டியிட்டு, இருகரம் கூப்பி அந்தக் காடையர்களைக் கும்பிடலானார். அருகில் உடைந்து சிதறியிருந்த அந்தக் கடைக்கதவுப் பலகையொன்றால் அவரின் முகத்தில் ஓங்கி அறைந்தான் காடையர்களில் ஒருவன். இரத்தம் குபீரெனப் பாய்ந்தது.

கண்முன்னால் ஒரு கொலையொன்று நிகழப்போகிறதோ என்ற பீதியுடன் உடல் உறைய நின்றிருந்தேன். *(தொடரும்.......)*

---

# ஆசிரியர் பிரச்சினையை தீர்க்க கல்வி அமைச்சு இணக்கம்!

## இலங்கை ஆசிரியர் சங்கச் சந்திப்பில் உறுதியளிப்பு

பொதுச்சேவை ஆணைக் குழு, அதிகாரங்களைப் பரவலாக்கம் செய்ததன் பலனாகவும், கல்வி அமைச்சின் செயலாளருக்கு வழங்கப்பட்ட அதிகாரங்களின்படியும் - வடமாகாண ஆசிரியர் சங்கம், தனது தாய்ச் சங்கமான இலங்கை ஆசிரியர் சங்கம் மூலம் தமிழ்மொழிமூலப் பாடசாலைகளில் ஆசிரியர்கள் மற்றும் மாணவர்கள் எதிர்நோக்கும் பல பிரச்சினைகள் பற்றிக் கடந்த மாதம் மகஜர் சமர்ப்பித்திருந்தது.

இது தொடர்பாக - கல்வி அமைச்சின் செயலாளருடனும், ஆசிரியர் தாபனக்கிளை சிரேஷ்ட செயலாளரான க.கஹாவித்தவுடனும் - இலங்கை ஆசிரியர் சங்கச் செயலாளர் சி.ஜெயதுங்க சமர்ப்பித்த கோரிக்கைகள் ஏற்கப்பட்டு, விரைவில் உரிய நடவடிக்கைகள் மேற் கொள்ள இணக்கம் காணப்பட்டிருக்கிறது.

இதன்படி -

- தமிழ்மொழிப் பாடசாலைகளிலுள்ள அதிபர் வெற்றிடங்களுக்கு, 1999 இல் நடைபெற்ற போட்டிப் பரீட்சைகளின் அடிப்படையில், அதிபர் சேவை தரம் I, II என்பவற்றுக்கு 500 பேரை உள்வாங்க கல்வி அமைச்சர் அனுமதித்து, திறைசேரிக்குச் சிபார்சு செய்துள்ளார்.

திறைசேரியின் அனுமதி கிடைத்ததும் நியமனங்கள் வழங்கப்படும்.

- 2003 ஜுன் 19 ஆம் திகதிக்கு முன் - பயிலுநர் ஆசிரியராக நியமிக்கப்பட்டவர்களை ஆசிரியர் சேவை 3II, 3I இற்கு உடனடியாக, அவர்கள் நியமிக்கப்பட்ட திகதியிலிருந்து உள்வாங்குதல் மற்றும் பட்டதாரிகளை அவர்கள் பட்டம் பெற்ற திகதியிலிருந்தும், அவர்களுக்கு உரித்தான வகுப்பில் உள்வாங்குதல்.
- ஆசிரிய பயிற்சிக் கலாசாலையிலுள்ள பயிற்சி ஆசிரியர் களின் உள்வாங்கலையும் உடன் செய்து, அவர்களது நிலுவைப் பணத்தையும் உடன் வழங்க வேண்டும்.
- கடந்த காலங்களில் ஆசிரியர் தெரிவின்போது, க.பொ.த (உ/த) பரீட்சை வெட்டுப்புள்ளி அடிப்படையில் விஞ்ஞான, கணித துறைகளில் விண்ணப்பதாரிகளுக்கு ஏற்பட்ட பாதிப்பைச் சுட்டிக்காட்டி, வெளியிடப்பட்டுள்ள வர்த்தமானி அறிவித்தலில்- ஆசிரியர் தொகை வெற்றிடமாகவுள்ள துறைகளின் பாட அடிப்படையில், வெட்டுப்புள்ளிகள் கவனத்தில் எடுத்துக்கொள்ளப்பட வேணடும்.
- பட்டதாரி ஆசிரியர்கள் நியமனம், பாடரீதியிலுள்ள வெற்றிடங்களின் அடிப்படையில் விண்ணப்பம் கோரப்படவேண்டும்.
- வடக்கு - கிழக்கு தவிர்ந்த ஏனைய பிரதேசங்களிலுள்ள தமிழ் மொழிமூலப் பாடசாலைகளில் ஏற்படும் வெற்றிடங்களுக்குப் போதிய விண்ணப்பதாரிகள் இல்லாதவிடத்து தேவையான ஆசிரியர்களை, வடக்கு-கிழக்கிலிருந்து தெரிவுசெய்ய வேண்டும்.
- யாழ். தேசிய கல்விக் கல்லூரியில், விசேட கல்விக் கான ஆசிரியர் பயிற்சியை இம்முறை ஆரம்பிக்க வேண்டும்.
- ஆங்கில ஆசிரியர் வெற்றிடங்கள் அதிகமாக இருப்பதால், உடனடியாக உயர்தொழிநுட்ப நிறுவனத்தில் ஆங்கில டிப்ளோமா பெற்றவர்களை ஆசிரியர்களாக நியமிக்க வேண்டும்.
- ஆங்கிலமொழிமூலக் கல்வியை, 6 ஆம் தரத்தில் புகட்டும் பாடசாலைகளுக்குப் பாடப்புத்தகங்கள் உடனடியாகக் கிடைக்க ஆவன செய்யப்படவேண்டும்.
- வடக்கு - கிழக்கு மாகாணத்தில், 2000 இற்கும் அதிகமான ஆங்கில ஆசிரியர் வெற்றிடங்கள் உள்ளதால், க.பொ.த. (சா/த) பரீட்சையில் விசேட சித்தியை ஆங்கிலத்தில் பெற்றவர்களுக்கு, குறுகிய காலப்பயிற்சியளித்து, முன்னர் இருந்த DELIC போன்ற நெறியொன்றை ஆரம்பித்து, அவர்களுக்குப் பயிற்சியளிக்க ஏற்பாடு செய்து, ஆசிரியராக நியமிக்க வேண்டும்.

போன்ற கோரிக்கைகளைச் செயற்படுத்தவே இணக்கம் காணப்பட்டிருக்கிறது (103)

### கணினி மயப்படுத்தப்படும் மக்கள் வங்கிக்கிளை

மக்கள் வங்கியின் பல்கலைக்கழகக் கிளையின் செயற்பாடுகள் அனைத்தும் கணினிமயப்படுத்தப் பட்டுள்ளது

எனவே, வாடிக்கையாளர்கள் தமது கணக்குப்பதிவுப் புத்தகங்களை வங்கியில் சமர்ப்பித்துக் கணினிமயப்படுத்திய புதிய பதிவுப் புத்தகத்தினைப் பெற்றுக் கொள்ளுமாறு வேண்டப்பட்டுள்ளது.

### தகவல் தொழில்நுட்ப ஆசிரியர்களுக்கு மேலதிக பயிற்சி

(யாழ்ப்பாணம்)

தகவல் தொழில்நுட்பப் பாடம் கற்பிக்கும் ஆசிரியர்களுககு, மேலதிக பயிற்சிகளை வழங்குவதற்குக் கல்வியமைச்சு நடவடிக்கை எடுத்து வருகிறது.

உலகவங்கியின் உதவியுடன் செயற்படுத்தப்படவுள்ள இத்திட்டத்திற்கு, தகவல் தொழில்நுட்பப் பாடம் கற்பிக்கும் ஆசிரியர்களிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன.

நாட்டிலுள்ள பல்கலைக்கழகங்கள், தேசிய கல்வி நிறுவகம் என்பவற்றினூடாக - இவர்களுக்கான பயிற்சிகள் வழங்கப்படவுள்ளன.

இத்திட்டத்தின் கீழ் முதற்கட்டமாக, வடக்கு - கிழக்கிலுள்ள 230 ஆசிரியர்கள் இணைத்துக் கொள்ளப் படவுள்ளதாக - கல்வி, மனிதவள, பண்பாட்டலுவல்கள் அமைச்சு அறிவித்துள்ளது.

### தேசியப் பாடசாலை தரமுயர்த்தல் இடைநிறுத்தம்

மாகாண சபைகளின் கீழுள்ள அரசாங்கப் பாடசாலைகளைத் தரமுயர்த்தும் நடவடிக்கைகளை - கல்வி, மனிதவள, பண்பாட்டலுவல்கள் அமைச்சு தற்காலிகமாக இடைநிறுத்தியுள்ளதாக, அமைச்சர் கருணாசேன கொடித்துவக்கு தெரிவித்துள்ளார்.

அண்மையில், அம்பாறை மாவட்டத்துக்கு, உத்தியோகபூர்வ விஜயமொன்றை மேற்கொண்டிருந்தபோதே, அங்கு அவர் இவ்வாறு தெரிவித்தார்.

## ஈராக்கில் பேரழிவு ஆயுதங்கள்

# பிரிட்டனின் பொய்த் தகவலை அம்பலப்படுத்தியவர் மரணம்

ஈராக்கிடம் பேரழிவு ஆயுதங்கள் உண்டு என்ற பொய்யான தகவலைக் கூறியே, பிரிட்டன் - ஈராக் மீது படையெடுத்தது என்ற தகவலை பி.பி.ஸி. மூலம் வெளியிட்ட கலாநிதி டேவிட் கெலி (வயது 59), நேற்று சடலமாக மீட்கப்பட்டுள்ளார். ஒக்ஸ்போர்ட்ஷேயர் பகுதியில் உள்ள காடு ஒன்றினுள் இவரது சடலம் மீட்கப்பட்டது. பொலிஸ் குழு ஒன்றினால், இச்சடலம் கண்டுபிடிக்கப்பட்டபோது - சடலம் தரையில் குப்புறக் கிடந்தது. கெலியின் வீட்டிலிருந்து ஐந்து மைல் தொலைவில், இவரின் சடலம் மீட்கப்பட்டது.

ஈராக்கிடம் பேரழிவு ஆயுதங்கள் இருப்பதாக பிரிட்டிஷ் புலனாய்வாளர்கள் பொய்யான தகவலை வழங்கி, அந்நாட்டின் மீது பிரிட்டன் படையெடுக்க வழிசெய்தனர் என, கெலி அண்மையில் பி.பி.ஸிக்கு அளித்த தகவல் ஒன்றில் குறிப்பிட்டிருந்தார். இது தொடர்பாக மேலும் விளக்கமளிக்க, அவர் பிரிட்டிஷ் வெளியுறவு விவகார சபை முன்பாக தோன்றி, கடந்த செவ்வாயன்று சாட்சியமும் வழங்கியிருந்தார்.



மரணமான டேவிட் கெலி

கடந்த வியாழன் இரவு கலாநிதி டேவிட் கெலி வீடு திரும்பாததையடுத்து, அவரது குடும்பத்தினர் பொலிஸாருக்கு அறிவித்தனர்.

# ஈராக் நிலைமைகள் தொடர்பாக புஷ்-பிளேயர் சந்தித்துப் பேச்சு!

(வொஷிங்ரன்)

ஈராக் நிலைமைகள் குறித்து அமெரிக்க - பிரிட்டிஷ் தலைவர்கள் சந்தித்து உரையாடியுள்ளனர்.



ஈராக்கில் மாறிவரும் நிலைமைகள் தொடர்பாக - பிரிட்டிஷ் பிரதமர் ரொனி பிளேயரும், அமெரிக்க ஜனாதிபதி புஷ்ஷும் ஆராய்ந்ததாகத் தெரிவிக்கப்படுகிறது. அமெரிக்க காங்கிரஸ் உறுப்பினர்களிடையே, பிரிட்டிஷ் பிரதமர் உரையாற்றிய பின்னர் இந்தச் சந்திப்பு இடம்பெற்றது.

இதேவேளை-

அமெரிக்கப் படைகளால் தடுத்துவைக்கப்பட்டிருக்கும் அல் - கொய்டா சந்தேக நபர்களான இரு பிரிட்டிஷ் பிரஜைகளின் கதி தொடர்பாகவும், இரு தலைவர்களும் ஆராய்ந்ததாகத் தெரிவிக்கப்படுகிறது.

ஈராக்கில் பேரழிவு ஆயுதங்கள் உண்டு என்றும், காலக்கிரமத்தில் அது தெரியவரும் எனவும், அமெரிக்க ஜனாதிபதி புஷ் இந்தச் சந்திப்பின் பின்னர் கருத்துத் தெரிவிக்கையில் குறிப்பிட்டார். சுதந்திரத்திற்கான போரில் நாம், என்றும் உங்களுடன் நிற்போம் என - பிரிட்டிஷ் பிரதமர் பிளேயர் அப்போது குறிப்பிட்டார்.

# அதிக கொழுப்பு உணவினால் மார்பு புற்றுநோய் உருவாகும்!

உயர்ந்த கொழுப்பு உணவுகளை உண்ணும் பெண்கள், மார்புப் புற்றுநோய்க்கு உள்ளாகும் வாய்ப்புக்கள் அதிகம் என கண்டறியப்பட்டுள்ளது. நாளுக்கு, 90 கிராமிற்கு அதிகமான கொழுப்பை உண்ணும் பெண்களுக்கு, மார்புப் புற்றுநோய் வரும் சந்தர்ப்பம் இரண்டு மடங்காக இருக்குமெனத் தெரிவிக்கப்படுகிறது.

கொழுப்பு உணவுக்கும், புற்றுநோய்க்கும் இடையிலான தொடர்பு குறித்து, இதுவரை எந்தத் தகவலும் வெளியாகவில்லை. தற்போது கேம்பிரிட்ஜ்ஜிலிருந்து வெளியாகும் ஒரு மருத்துவ சஞ்சிகை இத்தகவலை வெளியிட்டுள்ளது.

உலகவலம்

# லைபீரியாவுக்கு அமெரிக்க பிரசன்னம் தேவையற்றதாம்



லைபீரிய உள்நாட்டுப் போரில், மேற்கு ஆபிரிக்கப் படைகள் அமைதிப் பணியை மேற்கொள்ளக்கூடிய நிலையில் - அங்கு அமெரிக்கப்படைகளின் பிரசன்னம் தேவையற்றது என, ஐ.நா அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

மேற்கு ஆபிரிக்க நாடுகளின் அமைதிப்படை ஒன்று விரைவில் லைபீரியா சென்று - அங்கு அரச படைகளுக்கும், கிளர்ச்சியாளர்களுக்கும் இடையில் நடைபெறும் போரைத் தணிக்கும் நடவடிக்கையில் ஈடுபடுவர் என, அந்த அதிகாரி மேலும் தெரிவித்தார்.

லைபீரிய கிளர்ச்சிப் படையான லேர்ட் குழு, மீண்டும் தலைநகர் மொன்ரோவியா நோக்கி முன்னகர்ந்து வருகிறது. முன்பும் இருதடவை தலைநகர் நோக்கி இப்படையினர் முன்னேறியபோது, ஏற்பட்ட கடும் போரில் சிக்கி ஏராளமோனோர் பலியானது குறிப்பிடத்தக்கது.

# முத்தமிழ் வித்தகர் விபுலானந்த அடிகள்

விபுலானந்த அடிகளின் எப்பணியையும் உலகம் மறந்தாலும், அவருக்கு வரலாற்றில் அழியாத இடம் கொடுத்திருப்பது அவர் யாத்த யாழ் நூலாகும். இதனை அவர் படைத்த தலையாய படைப்பு என்று அறிஞர் கூறுவர். அடிகளாரின் யாழ் நூல் ஆக்கத்திற்கு அருந்தமிழ் நூல்களும், வடமொழி நூல்களும் ஆங்கில நூல்களும் துணை நின்றது உண்மை. அவர் ஒரு இளங்கலை அறிவியல் (B.Sc) பட்டதாரி. பெற்ற அறிவியல் அறிவு யாழின் நுணுக்கங்களை நுகர்ந்து உலகத்திற்கு உணர்த்த துணைநின்றது என்பதை நாம் மறுப்பதற்கில்லை.

இவர், மீன்பாடும் தேன் நாடாம் மட்டக்களப்பில் காரைதீவில் 1892 இல் தோன்றி, 1947 இல் தனது 55 ஆவது வயதில் இவ்வுலக வாழ்வை நீத்தார்.

27.03.1892 இல் பிறந்த இவருக்கு பெற்றோர் இட்ட பெயர் மயில்வாகனன். இவர், பண்டிதர் பட்டம் பெற்ற போது, பண்டிதர் மயில்வாகனம் என இவரை உலகம் அழைத்தது. இவர் யாழ்ப்பாணக் கல்லூரிகள் பலவற்றிலும பயின்றதோடு, அங்கு ஆசிரியராகவும் விளங்கியுள்ளார். அது போல மட்டக்களப்பிலும் பல பகுதிகளில் இவர் ஆசிரியராகப் பணியாற்றியுள்ளது குறிப்பிடத்தக்கது.

இளமையிலே துறவுள்ளம் பூண்டிருந்த பண்டிதர் மயில்வாகனார் - இராமகிருஷ்ண பரமஹம்சரினாலும், வீரத்துறவி விவேகானந்தராலும் ஆட்கொள்ளப்பட்ட நிலையில் இராம கிருஷ்ண தொண்டர் அவையுடன், (மிஷன்) தன் இதயத்தை இணைத்துக் கொண்டார். இந்த இராம கிருஷ்ண சங்கத்தினூடாக இவர் கல்வித்துறைக்கு ஆற்றிய பணி, மட்டக்களப்புக்கு கல்வித்துறையில் ஒரு தனி இடத்தைப் பெற்றுக் கொடுத்துள்ளது.

இவரது தலையாய படைப்பாகிய யாழ் நூல், அவருக்கு அறியாப் புகழைத் தந்தது. எனினும், அவரது ஏனைய படைப்புக்களை நாம் மறப்பதற்கு இல்லை. 'மதங்க சூளாமணி' அவருக்கு நாடகத் துறையிலிருந்த ஆர்வத்தையும், ஆற்றலையும் எடுத்துக்காட்டுகிறது. அவரின் கவித்துறை ஆற்றலும், தனித்தன்மை வாய்ந்தது. அவரது நண்பர் தமிழ் அறிஞர் கந்தசுவாமி அவர்கள் மறைந்த போது, அவர் எழுதிய 'கங்கையில் விடுத்த ஓலை' என்ற கவிதைத் தொகுப்பு எம் நெஞ்சை கசிந்துருகச் செய்யும், இரக்க உணர்வுப் பாடலாகவும் தமிழின் உருக்கும் தன்மைக்கு எடுத்துக்காட்டாகவும் விளங்குகின்றது.

அவர் படைத்த யாழ் நூல் அவருக்கு அழியாப் புகழைத் தந்துள்ளதை - நாடும், நானிலமும் ஏற்கும். ஆனால், அது கொண்டு அவரின் புகழை - அவ் எல்லைக்குள் வைத்திருப்பது தவறு. அவர் தொடாத துறையும் இல்லை. தொட்டுத்துலங்காத துறையும் இல்லை. கூறுவதற்கமைய அனைத்துத் துறைகளிலும் அவர் பணி துலங்கியது. துறவறம் பூணுவது யார்க்கும் எளிது. ஆனால், உண்மைத் துறவியாக வாழ்தல் என்பது எல்லோரும் கடைப்பிடிக்கத் தக்க நெறியல்ல. ஆனால், குறிப்பிடத்தக்களவு உள்ளும், புறமும் தூய்மையாகத் துலங்கும் துறவியாக விளங்கிய இவர், தூயோன் அருளை நாடி நின்றார்.

'என்கடன் பணி செய்து கிடப்பதே, உன்கடன் அடியேனை தாங்குதல்' என்ற அப்பர் கூற்றுக்கு இலக்காக வாழ்ந்த விபுலானந்த அடிகள் இறைவனைப்பற்றி எண்ணுகின்ற போதெல்லாம், தான் இயற்றிய பின்வரும் பாடலையே அவர், அடிக்கடி உச்சரித்து இறையருளில் தோய்வதுண்டு. மட்டக்களப்பு- கல்லடி உப்போடையில் உள்ள அவர் நினைவு இடத்தில் (சமாதி) இப்பாடல் பொறிக்கப்பட்டுள்ளது.

'வெள்ளை நிற மல்லிகையோ வேறெந்த நறுமலரோ வள்ளல் பிரானார்க்கு வாய்த்த மலரெதுவோ வெள்ளை நிறப் பூவுமல்ல வேறெந்த மலருமல்ல உள்ளக்கமலமடி உத்தமனார் வேண்டுவது'

இப்பாடலில் கூறியதற்கமைய வேறெதனையும் வேண்டாது நின்ற விபுலானந்த அடிகள், தம் உள்ளக் கமலத்தை இறைவனிடம் ஒப்படைக்கும் நோக்குடன் 19.07.1947 இல் இறைவன் திருவடியில் அமைதிகண்டார்.

மா.க.ஈழவேந்தன்


# மாவட்ட செயலகம் கிளிநொச்சி

## கேள்வி அறிவித்தல் - 2003

கீழ்க்குறிப்பிட்ட கட்டட வேலையை மேற்கொள்வதற்கான கேள்வி 'இக்ராட்' நிறுவனத்தில் தரம் '7' அல்லது அதற்கு மேற்பட்ட தரத்தில் பதிவு செய்யப்பட்டுள்ள ஒப்பந்தக்காரர்களிடமிருந்து மாவட்ட கேள்விச்சபைத் தலைவர்/அரசாங்க அதிபரினால் கோரப்படுகிறது.

*கேள்விப்பத்திரங்கள் வழங்கப்படும் கடைசித்திகதி :– 31. 07. 2003 பி. ப 3. 00 மணி*
*கேள்விகள் ஏற்றுக்கொள்ளப்படும் திகதி :– 05. 08. 2003 பி. ப. 1. 00 மணி*
*கேள்விகள் திறக்கப்படும் திகதி :– 05. 08. 2003 பி. ப 1. 00 மணி*

பூரணப்படுத்தப்பட்ட கேள்விப்பத்திரங்கள் யாவும் அரக்கு முத்திரையிடப்பட்ட கடித உறையில் வைக்கப்பட்டு அரசாங்க அதிபர், கிளிநொச்சி மாவட்டம்,, கச்சேரி, கிளிநொச்சி என்ற முகவரியிடப்பட்டு கேள்விகள் ஏற்கப்படும் கடைசித்திகதிக்கு முன்னர் கிடைக்கக்கூடியதாக பதிவுத் தபாலில் அனுப்பப்படல் வேண்டும். அல்லது இதற்கென இவ் அலுவலகத்தில் வைக்கப்பட்டுள்ள கேள்விப் பெட்டியில் இடப்படல் வேண்டும். கேள்விப்பத்திரத்தைக் கொண்டுள்ள கடித உறையில் இடது பக்க மேல் மூலையில் "உலக உணவுத் திட்டத்திற்கான பண்டகசாலை நிர்மாணம" என குறிப்பிடப்படல் வேண்டும்.

கேள்வி நிபந்தனைகளையும், மேலதிக விபரங்களையும் அலுவலகத்தில் அலுவலக நேரத்தில் அறிந்துகொள்ளலாம்.

| கேள்வியின் பெயர் | மீளளிக்கக்கூடிய கேள்வி வைப்புப் பணம் | மீளளிக்கப்படாத கட்டணம் |
| --- | --- | --- |
| உலக உணவுத்திட்டத்திற்கான பண்டகசாலை ஒன்று கிளிநொச்சியில் நிர்மாணித்தல். | 50,000/= | 1,000/= |

தி.இராசநாயகம்,
மாவட்ட கேள்விச்சபை தலைவர்
அரசாங்க அதிபர்
கிளிநொச்சி மாவட்டம்.

(சி-1250)



நிறைஞ்சனாஸ் சங்கானை

சரத்குமார், மீனா, ரம்யாகிருஷ்ணன் நடித்த

பாறை

காட்சி நேரம் 11.00, 2.45, 6.00 (பு.நே)

இன்றுமுதல்

THE ART OF WAR

இரவுக் காட்சி. 8.45 (பு.நே)

(சி-1338)



ராஜா யாழ்ப்பாணம்.

இலங்கையிலும், இந்தியாவிலும் ஒரே தின வெளியீடு

மாதவன், ஜோதிகா, ஸ்ரீதேவி நடித்த A.V.M இன்



10.30, 2.30, 6.30.9.30

ரிக்கெற் முற்பதிவு செய்து கொள்ளலாம். (சி-1137)

இயக்கம்: விக்ரமன



## சிறு விளம்பரம்

### விற்பனைக்கு

நல்ல நிலையிலுள்ள GJ தொடர் இலக்கமுள்ள CD 125 BENLY மோட்டார் சைக்கிள் விற்பனைக்குண்டு.

கிருஷ்ணமூர்த்தி, தேவி அச்சக ஒழுங்கை, 114/19 நாவலர் வீதி, யாழ்ப்பாணம். (T.P -2789) (421).



THE ROYAL COLLEGE OF JAFFNA

Spoken English with Grammar

N.Vigneswaran Archery, Black Road, Chankanai
426, (302) K.K.S. Road
Jaffna.

(சி-1157)



## முதலாவது பிறந்தநாள் வாழ்த்து



கொக்குவில் கிழக்கு – காளிகோவிலடியைச் சேர்ந்த **தயாரூபன் - றமியா** தம்பதிகளின் செல்வப் புதல்வன் **தனுசியன்** தனது முதலாவது பிறந்த நாளை 19.07.2003 இன்று தனது இல்லத்தில் வெகுவிமரிசையாகக் கொண்டாடுகிறார்.

இவரை அப்பா, அம்மா, அப்பம்மா, அப்பப்பா, அம்மப்பா, அம்மம்மா, தாத்தா, மாமாமார், அத்தைமார், அன்ரிமார், சித்தப்பாமார், அக்காமார், அண்ணாமார் அனைவரும் பல்லாண்டு காலம் வாழ வாழ்த்துகின்றனர்.

காளிகோவிலடி, கொக்குவில். (சி-1249)

தந்தை தயாரூபன், மாமா சுவர்ணராஜ்,

நமது ஈழநாடு
The Namathu Eezhanadu
The Leading Daily of Tamils' Homeland

# எமது மண்ணின் இசை ஆழத்தை உலகுக்கு அறிவித்தவர் என்.கே.பி.

## புகழாரம் சூட்டுகிறது கலை பண்பாட்டுக்கழகம்

நாதஸ்வர இசை மேதை என்.கே. பத்மநாதனின் மறைவு, தமிழீழ கலைத்துறைக்கு பேரிழப்பு என அன்னாரின் மறைவு குறித்து விடுதலைப் புலிகளின் கலை பண்பாட்டுக் கழகம் விடுத்த அனுதாபச் செய்தியில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அதில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது-

நாதஸ்வர சக்கரவர்த்தி என இசையுலகம் ஏற்றிப்போற்றிய என்.கே.பத்மநாதனின் பிரிவு, தமிழீழ கலைத்துறைகது குறிப்பாக இசைத துறைக்கு பேரிழப்பாகும். இவர், நாதஸ்வரக் கலையை என்றுமே தொழிலாகக் கருதியதில்லை. இசைத்துறையில் மூன்று தலைமுறைகண்ட இவரின் குழலோசைக்கு கட்டுண்டு இசையுலகமே மயங்கிக்கிடந்தது. தமிழீழ இசைவல்லமையை, தமிழகத்திலும் நிறுவி, அங்கும் எம்மண்ணின் புகழ்பரப்பியவர். தமிழர் வாழும் உலகத்தின் சகல நாடுகளுக்கும் இசைப்பயணங்கள் செய்து, எம்மண்ணின் இசையாழத்தை உலகுக்கு அறியச்செய்தவர்.

பல இளைய தலைமுறையினருக்கு தமிழரின் இராஜவாத்தியமான நாதஸ்வர இசையை முறைப்படி கற்றுக்கொடுத்து, புதிய பரம்பரையொன்றை உருவாக்கியவர். இவரின் குழல்வழியாகவும், விரல்வழியாகவும் இசை அருவியாகப் பாய்ந்தது.

சிரித்த முகமும், ஆணவமற்ற ஆற்றல் , எல்லோரையும் வாழ்த்தி வளர்த்துவிடும் பாங்கு, எம்மண்ணையும், கலைகளையும் பேணிய பக்குவம் என - அமரரின் வாழ்த்து ஒரு தவமாகவே இருந்தது. விடுதலைப் புலிகளின் கலை பண்பாட்டுக் கழகம் எடுத்த இசைவிழாக்கள், முத்தமிழ் விழாக்களிலும் மற்றும் நிகழ்வுகள் அனைத்திலும் கலந்து கொண்டு, தன்கலையால் எம்மை கௌரவித்துள்ளார். இறுதிவரையும் எம் கழகத்துடன் நெருக்கமான உறவும், அன்பும், மதிப்பும் கொண்டவராக இருந்தார். அப்பலோ மருத்துவமனையில் சுகவனமுற்றிருந்த இறுதி நாட்கள் வரை, எம்மண்ணுக்குப் பெருமையும் கீர்த்தியும் ஈட்டித்தரும் இசைவள்ளலாகவே வாழ்ந்தார்.

எல்லாவற்றிற்கும் மேலாக மண்ணை விட்டு அகலாத கலைஞர்கள், எம்மண்ணை மிகவும் நேசித்த மனிதராய், கலைக்காகவே தன் வாழ்நாளைக் கழித்த புனிதராய் இவரின் வாழ்விருந்தது. எமது தேசியத்தலைமையையும், எமது விடுதலைப் போராட்டத்தையும் வெகு அடக்கமாக அங்கீகரித்திருந்தார்.

தமிழீழ இசைத்துறைக்கு பேரிடிவிழுத்திய, இசை மேதை என்.கே. பத்மநாதனின் பிரிவுக்கு - எமது மண்ணின் சார்பாகவும், எமது விடுதலை அமைப்பு சார்பாகவும், தமிழீழக கலைஞர்கள் சார்பாகவும் -அன்னாரின் குடும்பத்தினருக்கும் கலைஞர்களுக்கும் விடுதலைப் புலிகள் கலை பண்பாட்டுக்கழகம், தனது அனுதாபத்தை தெரிவித்துக்கொள்கிறது என்றுள்ளது.

# உயர்பாதுகாப்பு வலயத்துக்குள் வீடுகள்; இதனால் மீளக்குடியமர முடியவில்லை!

## மன்னாரில் வாழும் யாழ்.மக்கள் தெரிவிப்பு

(மன்னார்)

உயர்பாதுகாப்பு வலயப் பகுதியில் தமது வீடுகள் அகப்பட்டுள்ளதாலேயே, தமது சொந்த இடங்களில் சென்று மீளக்குடியேற முடியாத நிலையில் உள்ளதாக, யாழ்ப்பாணத்திலிருந்து இடம்பெயர்ந்து மன்னாரில் வாழும் அகதிகள் தெரிவித்துள்ளனர்.

மனித உரிமை ஆணைக்குழுவின் இடம்பெயர்ந்தோருக்கான செயற்திட்ட அதிகாரிகள் குழுவினர், நடமாடும் சேவையினை மேற்கொண்டு, மன்னாரிலுள்ள அகதி முகாம்கள் உட்படப் பல இடங்களுக்கும் அண்மையில் விஜயம் செய்தனர். இதன்போது அதிகாரிகள் குழுவினரிடம் - அகதி முகாம்களிலுள்ள மக்களே இவ்வாறு தெரிவித்துள்ளனர்.

இக்குழுவினர் - பேசாலை, தட்சணாமருதமடு போன்ற பல இடங்களுக்குச் சென்று, அங்குள்ள அகதி முகாம்களிலுள்ள மக்களின் நிலைமைகளை நேரில் விசாரித்து ஆராய்ந்துள்ளனர்.

மனித உரிமை ஆணைக்குழுவின் இந்தக் குழுவினர், இதுவரை- திருகோணமலை, யாழ்ப்பாணம், மன்னார் ஆகிய இடங்களிலுள்ள அகதிமுகாம்களின் நிலைமைகளை ஆராய்ந்ததுடன், நாளையதினம் மட்டக்களப்புக்கும் செல்லவுள்ளனர் என்பது குறிப்பிடத்தக்கது.

வவுனியா அதிகாரி ஜெயந்தன், திருமலை அதிகாரி மணிவண்ணன், யாழ்ப்பாண அதிகாரி வேழினி, மட்டக்களப்பு அதிகாரி கபிலன், புத்தளம் அதிகாரி நிமால ஆஷா பெர்னாண்டோ, மன்னாரைச் சேர்ந்த ரைஸ் ஆகிய ஆறு மாவட்டங்களைச் சேர்ந்த உயரதிகாரிகள் இந்த நடமாடும் இடம்பெயர் சேவையினை நடத்தி வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

### பஸ் சேவை...

இதனால், இப்பகுதி அரச ஊழியர்கள் பெரும் சிரமத்திற்குள்ளாகினர். சிலர் நீண்ட தூரம் நடந்துசென்று, வேறு பஸ்களைப் பிடிக்க வேண்டியிருந்தது.

இவ்வழித்தடத்திற்கான பஸ் சேவை - அடிக்கடி, குறிப்பாக மாலையில் திடீரென ரத்துச் செய்யப்படுவது குறித்து, தமது மேலதிகாரிக்கும், டிப்போ அதிகாரிகளுக்கும் தாம் பலதடவை முறையிட்டும், எவ்வித பயனும் கிட்டவில்லை என, இந்த அரச ஊழியர்கள் கவலை தெரிவித்தனர்.

### கொழும்பிலிருந்து...

இறக்கப்பட்டனர். அதனைத் தொடர்ந்து வெடிகுண்டு நிபுணர்களும், பொலிஸாரும் சோதனைகளை நடத்தினர். அத்துடன்- விமானப் பயணிகளையும் விசாரணை செய்தனர் என, விமான நிலைய நடவடிக்கைப் பணிப்பாளர் காமினி அபயரட்ன தெரிவித்தார். எனினும், விமானத்தில் நடத்தப்பட்ட சோதனையின்போது- எந்த விதமான வெடிகுண்டுகளும் கைப்பறறப்படவில்லை.

நேற்று அதிகாலை 2.45 மணிக்கு புறப்படவிருந்த இந்த விமானத்தில் காலை 6 மணிக்கு குண்டு வெடிக்கும் என புரளி கிளப்பப்பட்டதால், 6 மணித்தியாலங்கள் தாமதித்து நேற்றுக்காலை 8.45 மணிக்கு கட்டுநாயக்கவிலிருந்து இந்த விமானம் புறப்பட்டுச் சென்றது.

### இடைக்கால...

வும், இருதரப்பும் ஏற்றுக்கொள்ளத்தக்க வகையிலும் தயர்ரித்துக் கொள்வதற்கு, நோர்வேத் தரப்பின் பங்களிப்பு மிகவும் முக்கியமானதாகக் கருதப்படுகிறது.

இறுதியானதும், முழுமையானதுமான இடைக்கால நிர்வாகத் திட்ட வரைபைத் தயாரித்துக் கொள்வதற்கு, இன்னமும் பல் படிநிலைகளைத் தாண்டிச்செல்ல வேண்டியுள்ளது என்றும், இதற்காக அதிகளவு நேரத்தைச் செலவிட வேண்டியிருக்கும் என்றும் கொழும்பில் உள்ள இராஜதந்திர வட்டாரங்கள் மேலும் தெரிவித்தன.

**வாழ்வகம்**

**விழிப்புல வலுவிழந்தோர் இல்லம்**

**சுன்னாகம்**

**15 ஆவது ஆண்டு விழா**

**இடம்**
வாழ்வகம், சபாபதிப்பிள்ளை வீதி,
சுன்னாகம்.

**காலம்**
20.07.2003 ஞாயிறு காலை 9.30

**தலைவர்**
செல்வி அ.சின்னத்தம்பி அவர்கள்
*(தலைவர்/வாழ்வகம்)*

**பிரதம விருந்தினர்**
திருமதி கமலா சிவசிதம்பரம் அவர்கள்
*(செயலாளர், பொதுநிர்வாகம், வ.கி.மாகாணம்)*

**சிறப்பு விருந்தினர்**
திருமதி றெஜீனா இருதயநாதன் அவர்கள்
*(வலயக் கல்விப்பணிப்பாளர், வலிகாமம்)*

**கௌரவ விருந்தினர்**
செஞ்சொற்செல்வன் திரு.ஆறுதிருமுருகன் அவர்கள்
*(ஆசிரியர், யாழ்.ஸ்கந்தவரோதயக் கல்லூரி)*

**அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்**

(சி-1257)

### அகதிகள் திரும்பினர்

தமிழக அகதி முகாமில் தங்கியிருந்த இரண்டு குடும்பங்களைச் சேர்ந்த நான்குபேர், நேற்று அதிகாலை நெடுந்தீவுப் பகுதியில், இந்திய மீன்பிடிப் படகு மூலம் வந்திறங்கினர்.

இவர்களைப் பொறுப்பேற்ற நெடுந்தீவு உதவி அரசாங்க அதிபர், பொலிஸாரிடம் ஒப்படைத்து, விசாரணைகள் முடிந்ததும் உடனடியாக யாழ். செயலகத்தில் கையளித்தார்.

குடும்பமொன்றுக்கு தலா 1000 ரூபா வீதம் உதவிப் பணக் கொடுப்பனவு வழங்கப்பட்டு, இவர்களைச் சொந்த இடங்களுக்கு அனுப்புவதற்கான நடவடிக்கையும் மேற்கொள்ளப்பட்டது.

க.யோகசுந்தரம் (வயது 54, மட்டக்களப்பு), யோ.சுபதீபன் (வயது 28, மட்டக்களப்பு), சு.விக்கினேஸ்வரன் (வயது 33, மன்னார்), வி. அனிற்றா (வயது 27, மன்னார்) ஆகியோரே நெடுந்தீவை வந்தடைந்தவர்களாவர். (113)

### தலைமன்னாரில் மீள்குடியேற வசதி

(மன்னார்)

தலைமன்னார் பகுதியில் சுவிஸ் அரசசார்பற்ற நிறுவனம் ஒன்று, மக்கள் மீள்குடியேறுவதற்கு வசதியாக அப்பகுதியிலிருந்து ஏராளமான கண்ணிவெடிகளை அகற்றியுள்ளது. கடந்த மூன்று மாதங்களில் இப்பகுதியில் இந்த நிறுவனத்தால் 1,394 கண்ணிவெடிகளும், 9 கிளைமோர் குண்டுகளும் மீட்கப்பட்டு அழிக்கப்பட்டுள்ளன.

### ஜனாதிபதியிடம்...

விடுதலைப் புலிகளிடம் கையளிப்பதற்கு முன்னர், ஜனாதிபதியுடன் கலந்தாலோசித்திருக்க வேண்டும் என்றும்- பொதுஜன ஐக்கிய முன்னணியின் ஊடகப் பேச்சாளர் குறிப்பிட்டார். அதற்கான போதிய கால அவகாசம் அரசாங்கத்திற்கு இருந்ததாகவும் அவர் கூறினார்.

இதேவேளை - இலங்கை வந்திருந்த அமெரிக்கப் புலனாய்வு அதிகாரி போல்ஸ் வூல்மன் பாதுகாப்புக் குழுக் கூட்டத்தில் கலந்து கொண்டமைக்கு எதிர்ப்புத் தெரிவித்து பொ.ஐ.மு. நாடாளுமன்ற உறுப்பினர்கள் எதிர்ப்பு நடவடிக்கைகளை மேற்கொள்ளவுள்ளனர் எனவும் அமுனுகம நேற்றுத் தெரிவித்தார்.

# வட - கிழக்கு மாகாணங்களை இரண்டாகப் பிரிக்க வேண்டும்!

## அதாவுல்லா கூறுகிறார்

வடக்கு - கிழக்கை மீண்டும் இரண்டு மாகாணங்களாகப் பிரிக்க வேண்டும் என, நெடுஞ்சாலைகள் அமைச்சர் ஏ.எல்.எம். அதாவுல்லா தெரிவித்துள்ளார். ஆரம்ப காலங்களில் இந்த இரண்டு மாகாணங்களும் வெவ்வேறாக இயங்கி வந்ததாகவும் அவர் குறிப்பிட்டார்.

கிண்ணியாவில் நடைபெற்ற வைபவம் ஒன்றில் உரையாற்றும்போதே, நெடுஞ்சாலைகள் அமைச்சர் இதனைக் குறிப்பிட்டார். இதேவேளை வடக்கும் கிழக்கும் இணைந்து செயற்படவேண்டும் என, மக்கள் தீர்மானித்தால் - அதனை ஏற்றுக் கொள்ளத் தாங்கள் தயாராக இருப்பதாகவும் அவர் தெரிவித்தார்.

வடக்கையும் கிழக்கையும் இணைக்கும் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டால், அந்தப் பகுதியில் மற்றுமொரு பெரும்பான்மை இனம் உருவாகி - மற்றுமொரு இனப்பிரச்சினை ஏற்படும் என, அமைச்சர் அதாவுல்லா தெரிவித்தார்.

# பருத்தித்துறைத் துறைமுகம் துறைமுக அதிகார சபையிடம்!

## நேற்று பொறுப்பேற்றது

யாழ். செயலகப் புனர்வாழ்வுக் கிளையின் பொறுப்பிலிருந்த பருத்தித்துறைத் துறைமுகத்தை, துறைமுக அபிவிருத்தி அதிகாரசபையினர் நேற்றுப் பொறுப்பேற்றனர்.

துறைமுக அபிவிருத்தி அதிகார சபையின் தலைவர் பராக்கிரம திஸநாயக்க உட்படப் பதின்மூன்று உயரதிகாரிகளைக் கொண்ட குழுவினர், பருத்தித்துறைத் துறைமுகத்தைப் பொறுப்பேற்பதற்காக, நேற்று யாழ்ப்பாணம் வந்திருந்தனர்.

நேற்றுக்காலை 11 மணியளவில், யாழ். செயலகத்திற்கு வந்த துறைமுக அதிகாரசபை அதிகாரிகள், அரச அதிபர் மற்றும் ஏனைய அதிகாரிகளைச் சந்தித்த பின்னர்- பருத்தித்துறைக்குச் சென்று, துறைமுகத்தினை யாழ். அரச அதிபரிடமிருந்து உத்தியோகபூர்வமாகக் கையேற்றனர்.

அதேவேளை, நீண்டகாலமாகவே இத்துறைமுகத்தில் பணிபுரிந்துவந்த 41 ஊழியர்களுக்கும், துறைமுக அபிவிருத்தி அதிகாரசபைத் தலைவர் நிரந்தர நியமனக் கடிதங்களை உடனடியாகவே வழங்கியதாகத் தெரிய வருகிறது.

இந்த நிகழ்வில் - யாழ். அரச அதிபர் செ.பத்மநாதன், திட்டப்பணிப்பாளர் சுந்தரம்பிள்ளை, பருத்தித்துறை பிரதேச செயலர் சிவசுவாமி, கரவெட்டிப் பிரதேசசபையின் உதவிப் பிரதேச செயலாளர் வீரபத்திரப்பிள்ளை ஆகியோரும் கலந்து கொண்டனர்.

# கல்லடியில் கைதான புலிகளுக்கு 31 ஆம் திகதிவரை விளக்கமறியல்

(மட்டக்களப்பு)

மட்டக்களப்பு - கல்லடியில் வைத்து கடந்த மாதம் 14 ஆம் திகதி கைது செய்யப்பட்ட போராளிகள் எட்டுப் பேரையும், எதிர்வரும் 31 ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறு, மட்டக்களப்பு மாவட்ட நீதிபதி உத்தரவிட்டார்.

கடந்த 14 ஆம் திகதி அம்பாறையிலிருந்து மட்டக்களப்பு நோக்கி வாகனம் ஒன்றில் வந்துகொண்டிருந்த போராளிகள் எட்டுப் பேர், கல்லடியில் வைத்துப் படையினரால் கைதுசெய்யப்பட்டனர்.

கைதுசெய்யப்பட்ட எட்டுப் போராளிகளும், மறுநாள் மட்டக்களப்பு மாவட்ட நீதிமன்றில் ஆஜர் செய்யப்பட்டபோது, அனைவரையும் விளக்கமறியலில் வைக்குமாறு நீதிவான் உத்தரவிட்டிருந்தார்.

நேற்று, இவர்களை நீதிமன்றில் ஆஜர் செய்தபோது, இவர்கள் தொடர்பான அறிக்கை சட்டமா அதிபருக்கு அறிக்கை அனுப்பப்பட்டுள்ளதாகவும், சட்டமா அதிபரின் அறிவுறுத்தல் வரும்வரை - எதிர்வரும் 31 ஆம் திகதிவரை எட்டுப் பேராளிகளையும் விளக்கமறியலில் வைக்குமாறும் மாவட்ட நீதிபதி ஏ.எல். கபூர் உத்தரவிட்டார். (07)

### திட்டங்களுக்கு...

மக்கள் நலன் கருதும் சகல அபிவிருத்தித் திட்டங்களுக்கும், தமது முழுமையான ஒத்துழைப்புக் கிடைக்கும் என உறுதியளித்தார்.

இந்த வைபவத்தில், தமிழர் புனர்வாழ்வுக் கழகத்தின் திட்டமிடல் பணிப்பாளர் லோறன்ஸ் திலகரும் பங்குபற்றினார்.

**மஹஜன சம்பத பெறுபேறுகள்**

| சீட்டிழுப்பு இல: | 1530 | திகதி: | 18.07.2003 |
|---|---|---|---|

வெற்றி இலக்கங்கள்

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| Y | 2 | 8 | 4 | 5 | 6 | 7 |

இப்பத்திரிகை இல.267, நாவலர் வீதி, யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள நமது ஈழநாடு அச்சகத்தில் 19.07.2003 அன்று பொன்னுத்துரை குருதேவ் அவர்களால் அச்சிட்டு வெளியிடப்பட்டது.